# உதய சூரியன்

UTHAYASOORIYAN උදයසූරියන්

*Source for reading hunters*

உதயசூரியன் (களம் 01 - உதயசூரியன் - 48) (01 ஆகஸ்ட் 2013) பக்கம்: 32 விலை: 20/=





## வேண்டாம் இன்னுமொரு பரிதாப மரணம்!






## நையப்புடைக்கப்பட்ட மாலக சில்வா!

## சீறியெழுந்த தந்தை மேர்வின் சில்வா!

## நான் உயிரோடுதான் இருக்கிறேன்—கனகா

# வேண்டாம் இன்னுமொரு பரிதாப மரணம்!

## வெலிஓயா தோட்ட ரஞ்சன் சுமதியின் மரணத்திற்கு கிளங்கன் வைத்தியசாலையே பொறுப்பு கூறவேண்டும்!



சில மரணங்கள் பல உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவருகின்றன. அடிப்படை வைத்திய வசதிகள் கூட கிடைக்காத பெருந்தோட்டங்களின் அவலத்தையும் நகர வைத்தியசாலைகளில் பெருந்தோட்ட மக்களுக்கு காட்டப்படும் பாரபட்சத்தையும், வைத்திய சேவையாளர்களின் அலட்சியத்தையும் வெலிஓயா புதுக்காடு தோட்ட ரஞ்சன் சுமதி என்ற கர்ப்பிணித் தாயின் மரணம் அழுந்தக் கூறியிருக்கின்றது.

வெலிஓயா புதுக்காடு தோட்டத்தைச் சேர்ந்த ரஞ்சன் சுமதி (வயது 26) என்ற கர்ப்பிணித்தாய் உரிய நேரத்தில் வைத்திய சிகிச்சைகள் கிடைக்காத காரணத்தினால் பரிதாபகரமாக மரணித்துள்ளார்.

இவரது மரணம் இப்பகுதியில் பெரும் சோகத்தை விதைத்துள்ளதுடன் இப்பிரதேசத்தில் காணப்படும் வைத்திய வசதிகளின் மோசமான நிலைமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

வெலிஓயா புதுக்காடு தோட்டத்தைச் சேர்ந்த ரஞ்சன் சுமதிக்கு இது முதலாவது பிரசவம். அடுத்த மாதமே குழந்தை பிறப்பிற்கான திகதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் கடந்த 28 ஆம் திகதி அவர் வயிற்று வலியை உணரவே குடும்பத்தினர் அதிகாலை 2.30 மணியளவில் அவரை உடனடியாக கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

கிளங்கன் வைத்திய சாலையில் அவ்வேளை கடமையில் வைத்தியர்கள் இருக்கவில்லை. தாதியர்களே இப்பெண்ணுக்கு வைத்திய சாலையில் அனுமதி வழங்கியுள்ளனர்.

வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணருக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கி அவரை வரவழைத்து சிகிச்சை வழங்குவதாக அவர்கள் உறவினர்களிடம் கூறியுள்ளனர்.

எனினும் அதிகாலை 5.00 மணிவரை குறித்த வைத்தியரும் வரவில்லை. வலியால் துடித்துக் கொண்டிருந்த கர்ப்பிணித் தாய்க்கு சிகிச்சையும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் இத்தாயை நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்போவதாக தெரிவிக்கப்பட்டு அம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் நாவலப் பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் அப்பெண் உயிரிழந்தே இருந்ததாக நாவலப்பிட்டி வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளங்கன் வைத்தியசாலையில் இப்பெண்ணுக்கு அவசர சிகிச்சை வழங்காது காட்டப்பட்ட அலட்சியம் காரணமாகவே இப்பெண் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.








இதுகுறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

### வழியில் வலி: சிகிச்சைக்கு எவருமில்லை!

குறித்த பெண்ணுக்கு அவசர சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என விசேட மகப்பேற்று நிபுணருக்கு தகவல் அளித்தும் அவர் உரியவேளையில் சிகிச்சையளிக்க வருகை தரவில்லை. இந்நிலையில் குறித்த தாய் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அவசர நோயாளியை அம்புலன்ஸில் அழைத்துச் செல்லும் போது கட்டாயமாக மருத்துவத் தாதியொருவர் அருகில் இருக்க வேண்டும். ஆனால், இத்தாயை கொண்டு செல்லும் போது வைத்தியசாலை சிற்றூழியர்களே உடன் சென்றுள்ளனர். அதுவும் இத்தாயின் அருகில் அவர்கள் இருக்கவில்லை. முன்புற இருக்கையிலேயே அமர்ந்து சென்றுள்ளனர். அதேவேளை உறவினர்களும் உடன்செல்ல அனுமதிக்கப்படவில்லை. நீங்கள் வேறு வாகனத்தில் வாருங்கள் என அவர்களை விட்டுச் சென்றாகக் கூறப்படுகிறது. வழியில் பிரசவ வலி கண்ட இத்தாய் சிகிச்சை எதும் இன்றி உயிரிழந்திருக்கக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

### மரணத்திற்கு காரணம் இது மட்டும்தானா?

இந்த இளம்தாயின் பரிதாப மரணத்திற்கு காரணம் இதுவாக இருந்தாலும் இப்பகுதியில் காணப்படும் மோசமான மருத்துவ சேவைகள், வசதிகள் நிச்சயமாக ஆராயப்பட வேண்டியவை. ஆராய்ந்து தீர்க்கப்பட வேண்டியவையே.

- தொடர்ச்சி 25 ஆம் பக்கம் -

# மீண்டும் பரீட்சை குளறுபடிகள்!

என்னதான் நடக்கிறது? என்று தலையில் கைவைக்குமளவுக்கு இலங்கையின் கல்வித்துறை தொடர்ச்சியான குளறுபடிகளை சந்தித்து வருகின்றது.

கடந்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் விஞ்ஞான வினாப்பத்திரம் பகுதி I வினாக்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தின் இலட்சணம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

அது மாத்திரமல்ல 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையின் வினாத்தாள் வெளியாகியமை, உ/த பரீட்சையின் 'Z' புள்ளி குளறுபடி என பரீட்சைத் திணைக்களத்தின் கரும் புள்ளிச் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இந்நிலையில் பாடசாலைகளில் நடைபெறும் இரண்டாம் தவணை பரீட்சையிலும் பாரிய குளறுபடிகள் நிகழ்ந்துள்ளமை பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

வழமையாக பாடசாலை மட்டத்தில் தயாரித்த அல்லது தனியார் பரீட்சை வினாத்தாள்களை பெற்றே பாடசாலைகள் பரீட்சையை நடத்துவது வழமை.

ஆனால், இம்முறை 2 ஆம் தவணை பரீட்சை வினாத்தாளை தயாரித்துக் கொடுக்கும் பொறுப்பை வலயக் கல்விக் காரியாலயங்கள் தாமே பொறுப்பேற்றுக் கொண்டன. அதற்கும் மாணவர்களிடம் பணம் அறவிடப்பட்டதையும் இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டியுள்ளது.

குருணாகல், கொழும்பு, மாத்தளை போன்ற பகுதிகளில் பரீட்சை குளறுபடிகள் உச்சத்தில் இருந்ததை அவதானிக்க முடிந்தது. குருணாகல் மாவட்டத்தில் சிங்கள பாட வினாப்பத்திரத்துடன் விடைகளையும் அச்சிட்டுக் கொடுத்த நகைச்சுவையை முழு நாடுமே கண்டுகளித்தது.

உரிய அளவிலான வினாக்களை கொண்டிருக்காத, பட விளக்கங்கள் தெளிவாக அச்சிடப்படாத வினாப்பத்திரங்களை இம்முறை மாணவர்கள் சந்திக்க நேர்ந்தது.

கொழும்பு, மாத்தளை மாவட்டங்களில் பரீட்சை வினாத்தாள் குளறுபடிகளால் கடந்த வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற இருந்த பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை 10 ஆம் மற்றும் 11 ஆம் தரங்களிற்கு நடைபெற இருந்த வர்த்தக பாட பரீட்சை வினாத்தாள் குளறுபடியால் இடைநிறுத்தப்பட்டது.

இதேபோல மாத்தளை மாவட்டத்தில் வினாத்தாள் உரிய எண்ணிக்கையில் பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லையெனவும் அச்சுபதிப்பு தெளிவில்லாமல் அரைகுறையாக காணப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

55 - 60 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வினாப்பத்திரத்திற்கு 100 - 140 ரூபா வரை வலய கல்விக் காரியாலயங்கள் பெற்றுக்கொண்டு அலட்சியம் காட்டுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவிக்கின்றது.

மாத்தளை வலய பாடசாலைகளுக்கு உரிய நேரத்துக்கு வினாப்பத்திரங்கள் கிடைக்காமையால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் அசௌகரியங்களை சந்தித்துள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவேண்டிய தரம் 3, 4, 5 இற்கான சுற்றாடல் பாட பரீட்சை வினாப்பத்திரம் உரிய நேரத்துக்கு கிடைக்காமையால் அதிபர்கள் அச்சகத்தை முற்றுகையிட்டு வரிசையில் முண்டியடித்துள்ளனர்.

இதேபோல விஞ்ஞானம், ஆங்கில பாட வினாப்பத்திரங்கள் மாணவர் எண்ணிக்கையை விட குறைவாக இருந்ததால் பரீட்சையை நடத்த முடியாமல் ஆசிரியர்களும், அதிபர்களும் திக்குமுக்காடிப் போயுள்ளனர். மாத்தளை கல்விக் காரியாலயங்களின் இந்த அசட்டைத்தனத்தை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்திய மாகாண இணைப்பாளர் கமதெர திசாநாயக்க கடுமையாக கண்டித்துள்ளார்.

மாத்தளை பாடசாலைகளில் நடைபெறும் இப் பரீட்சை குளறுபடிகள் தொடர்பாக மாத்தளை வலயக் கல்விக் காரியாலய உயர் அதிகாரி ஒருவர் விசித்திரமாக பதிலளித்துள்ளார்.

இரண்டாம் தவணை பரீட்சை அவ்வளவு முக்கியமானதல்ல. உரிய காலத்தில் பரீட்சையை வைக்க முடியாவிட்டால் வேறொரு தினத்தில் வைக்கலாம். இது ஒரு பெரிய பிரச்சினை அல்ல. இதை பெரிதுபடுத்த வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

2 ஆம் தவணை பரீட்சையை நடத்தும் பொறுப்பை அந்தந்த பாடசாலைகளுக்கே கொடுத்திருந்தால் எவ்வித குளறுபடியும் இல்லாமல் அவர்களே சுமுகமாக நடத்தியிருப்பர். அதைவிடுத்து சிலரின் பொக்கட்டுகளை நிரப்ப பரீட்சை நடத்தும் பொறுப்பை கல்விக் காரியாலயங்கள் எடுத்துக் கொண்டதால் ஏற்பட்ட விளைவே இந்தக் குளறுபடிகள் என ஆசிரியர்களும், பெற்றோர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்விக் காரியாலயங்களினாலேயே ஒரு தவணைப் பரீட்சையை சிறந்த முறையில் நடத்தமுடியாமல் "இப்பரீட்சை அவ்வளவு முக்கியமானதல்ல. இன்று முடியாவிட்டால் நாளை நடத்துங்கள்" என சப்பைகட்டு கட்டுவதை என்னவென்று கூறுவது. இவ்வாறான அதிகாரிகளினாலேயே கல்வித்தரமும், பரீட்சை மீதுள்ள நம்பிக்கையும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றது.

ஆக, எதிர்வரும் காலத்திலாவது பரீட்சைகள் மீது நம்பிக்கையும் மதிப்பும் ஏற்படும் வகையில் உரிய தரப்புக்கள் நடந்துகொள்வது அவசியம்.

-எம்.தாசன்-





# உயிரோட்டம் உள்ளதா வாழ்க்கையில்?

எல்லோருமே வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தேடுகிறோம், ஒரு அர்த்தத்தைத் தேடுகிறோம், வெற்றியடைய ஆசைப்படுகிறோம். மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் எது எது என்பது ஆளுக்கு ஆள் மாறுபடும் விஷயங்கள் என்றாலும் எல்லோருடைய தேடலும் அவற்றை நோக்கியே இருக்கின்றன.

என்றேனும் ஒரு நாளில் வெற்றியடைவோம், வாழ்வில் அர்த்தம் கண்டு பிடிப்போம், மகிழ்ச்சியடைவோம் என்ற எதிர்பார்ப்பில் தினசரி வாழ்க்கையைக் கோட்டைவிடும் முட்டாள்த்தனம் பலரிடம் இருக்கிறது.

பலருடைய தினசரி வாழ்க்கை இயந்திரத்தனமாக இருந்துவிடுகிறது. என்றோ வாழப்போகும் நல்லதொரு வாழ்க்கைக்கான ஓட்டப்பந்தயமாக இருந்துவிடுகிறது.

வாழ்கின்ற வாழ்க்கை சரிதானா என்ற சந்தேகம் அடிக்கடி வர, அடுத்தவர்களைப் பார்த்து அவ்வப்போது மாற்றிக் கொள்கின்றதாகி விடுகிறது. இயற்கையான ஆரம்ப இலக்குகள் மாறி பணம், புகழ், படாடோபம் என்ற இலக்குகள் பெரும்பாலானவர்களின் இலக்குகளாகிவிடுகின்றன. இந்த இலக்குகளில் மகிழ்ச்சியும், அர்த்தமும், வெற்றியும் தேடும்போது பலருக்கும் ஏமாற்றமே மிஞ்சுகிறது.

உண்மையான மகிழ்ச்சி, அர்த்தம், வெற்றி இருக்கிறதா என்பதை அறிய ஒரு மனிதனின் தினசரி வாழ்க்கையைப் பார்ப்பது மிகச்சரியாக இருக்கும்.

காலத்தை மறந்து, செய்கின்ற வேலையில் ஐக்கியமாவது உண்டா? பெரிய செலவில்லாமல் இரசிக்கும் சின்னச் சின்ன விஷயங்கள் உண்டா? அடுத்தவர் பார்வைக்கு எப்படி இருக்கிறது என்று கவலைப்படாமல் உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காகவே ஈடுபடும் விஷயங்கள் உண்டா? பெரும்பாலான நாட்களில் உற்சாகமாக எதிர்பார்க்கவும், செய்யவும் ஏதாவது புதுப்புது முயற்சிகள் உண்டா?

இதில் ஓரிரண்டு கேள்விகளுக்காவது பதில் ஆம் என்று இருந்தால் உங்கள் வாழ்க்கை உயிரோட்டம் உள்ள வாழ்க்கை. உங்கள் வாழ்க்கை அர்த்தத்தோடும், மகிழ்ச்சியாகவும், வெற்றிகரமாகவும் போய்க் கொண்டிருக்கிறது என்று பொருள்.

அதற்கு எதிர்மாறாக உங்கள் தினசரி வாழ்க்கை இருந்து வந்தால் உங்கள் வாழ்க்கையில் உண்மையான உயிரோட்டம் இல்லை என்று பொருள்.

கேளிக்கைகளில் ஈடுபட்டால் தான் மகிழ்ச்சி கிடைக்கிறதா? தினசரி குடித்தால் தான் நிம்மதி கிடைக்கிறதா? அடுத்தவர்களைப் பற்றி வம்பு பேசித் தான் பொழுதுபோகிறதா? அடுத்தவருடன் ஒப்பிட்டுப் பார்த்து மிஞ்ச முனைவதில் தான் தினமும் அதிக நாட்டம் செல்கிறதா? பொருளாதார இலாபம் இல்லாவிட்டால் உங்களுக்கு மிக ஆர்வமுள்ளவற்றில் கூட கவனம் செலுத்த மறுக்கிறீர்களா? இதில் சிலவற்றிற்கு பதில் ஆம் என்றால் உங்கள் வாழ்க்கையில் ஓட்டம் இருக்கலாம். ஆனால், உயிர் இல்லை என்று பொருள்.

உயிரோட்டமுள்ள வாழ்க்கைக்கு சில உதாரணங்களைப் பார்ப்போம். எடிசன், ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிகளில் மூழ்கி விடும்போது உலகத்தையே மறந்துவிடுவார்களாம். கொண்டுவந்து வைக்கப்படும் உணவை உண்ணக் கூட மறந்துவிடுவது சகஜமாம்.

லியார்னாடோ டாவின்சி, மைக்கேல் ஏஞ்சலோ போன்ற ஓவிய மேதைகளும் அப்படியே தங்கள் படைப்பில் மூழ்கிவிடுவார்களாம். அப்படியே தான் எல்லா துறை மேதைகளையும் சொல்லலாம். அந்த நேரங்களில் செய்யும் வேலையின் சிரமங்களோ, வரப் போகும் லாபங்களோ, கிடைக்கப் போகும் புகழோ அவர்கள் கவனத்தில் இல்லை.




அந்தத் தருணங்கள் மிக அழகானவை. உயிரோட்டமுள்ளவை. செய்யும் செயல் முழுமை பெறப் பெற அவர்கள் அடையும் சந்தோஷம் வார்த்தைகளில் அடங்காதது.

அதே நேரத்தில் அது அர்த்தமுள்ளதாகவும் அமைந்து வெற்றியையும் அளித்துவிடுகிறது. அந்த அளவு தனித்திறமை இல்லா விட்டாலும் எத்தனையோ பேர் தங்கள் இயல்புக்கு ஏற்ப உயிரோட்டமான உபயோகமான வாழ்க்கை வாழ்வதை நாம் பல இடங்களிலும் பார்க்கலாம்.

மனதுக்குப் பிடித்ததே வேலையாகவோ, தொழிலாகவோ அமையும் பாக்கியம் ஒருசிலருக்கே வாய்க்கிறது. பலருக்கு அப்படி அமைவதில்லை.

அமைகின்ற வேலை உற்சாகமாக இல்லாதபோது பொழுது போக்கு ஒன்றையாவது உற்சாகமாகவோ, உபயோகமாகவோ வைத்துக்கொள்வது மிக புத்திசாலித் தனமான அணுகுமுறை.

இப்படி பலர் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் பிடித்த ஒன்றில் ஆர்வமாக ஈடுபட்டு வாழ்க்கை எந்திரத்தனமாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள். சாதனை புரியவோ, சரித்திரம் படைக்கவோ முடியாவிட்டாலும் வாழ்க்கை உயிரோட்டமாக இருக்கும்படி இப்படிப்பட்டவர்கள் பார்த்துக் கொள்கிறார்கள்.

இப்படி உயிரோட்டமான வாழ்க்கை வாழ்பவர்கள் பெரும்பாலும் உபயோகமான வாழ்க்கை வாழ்கிறார்கள். இல்லாவிட்டாலும் கூட மற்றவர்களுக்கு உபத்திரவமாக என்றும் மாறுவதில்லை. தங்கள் வாழ்க்கையில் தங்கள் வழியில் நிறைவு காண்பவர்கள் அடுத்தவர்கள் வாழ்க்கையில் அநாவசியமாகக் குறுக்கிடுவதில்லை. அடுத்தவர்களை நோகடிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகளையும், துக்கங்களையும் சமாளித்து சீக்கிரமே மீண்டும் விடுகிறார்கள்.

அப்படி உயிரோட்டமில்லாத வாழ்க்கை வாழ்பவர்களோ அதிகமாக அடுத்தவர்களைப் பார்த்தே வாழ்கிறார்கள். பொருளாதார நிலையே மிக முக்கியம் என்று நம்பி சம்பாதிக்கும் முனைப்பில் தனிப்பட்ட இயல்பான திறமைகளையும், ஆர்வங்களையும் சிலர் பலி கொடுத்துவிடுகிறார்கள்.

பணம், பொருள், சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டே போகும் அவர்கள் வாழ்வில் முன்பு சொன்னது போல ஓட்டம் இருக்கிறது. உயிர் இருப்பதில்லை. ஒரு வெறுமை என்றும் இருந்து கொண்டே இருக்கிறது. அந்த வெறுமையை நிரப்ப சிலர் போதையை நாடுகிறார்கள், சிலர் கேளிக்கைகளில் அதிகம் ஈடுபடுகிறார்கள், சிலர் பதவி அதிகாரம் தேடி அலைகிறார்கள்.

வெளிப்பார்வைக்கு அந்த வாழ்க்கை வெற்றியாகவும், மகிழ்ச்சியாகவும் தோன்றினாலும், நிரப்ப முடியாத வெறுமையாகவே அப்படிப்பட்ட வாழ்க்கை இருந்து விடுவது தான் சோகம்.

எனவே, உங்கள் வாழ்க்கையில் உயிரோட்டம் உள்ளதா என்பதை சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். மாற்றம் தேவையானால் மாற்றிக் கொள்ளுங்கள். அடுத்தவர் பார்வைக்கு வெற்றிகரமான வாழ்க்கையாய் தெரிந்து உள்ளுக்குள் வெறுமையை உணரும் வாழ்க்கையாக இருக்கும் அவலம் மட்டும் வேண்டவே வேண்டாம்.

## தப்பு

பஸ்ஸில் பயணம் செய்த முதியவர் பஸ் நடத்துநரிடம் தனது மீதிச் சில்லறை காசைக் கேட்டார்.

நடத்துனரிடம் சில்லறை இல்லாததால் இல்லை இறங்க முன் கிடைத்தால் தருகிறேன் என்றார்...!

முதியவர் கோபப்பட்டு தனக்கு அருகில் இருந்தவரிடம் சொன்னார். "இந்த பாவங்களை எல்லாம் எப்படி கழிக்கப்போறாங்களோ... தெரியல்ல" என்றார்.

அருகில் இருந்தவர் ஒரு முதியோர் இல்லம் நடத்தும் ஒரு இயக்குநர். அவர் இந்த பஸ்ஸில் தினம் தோறும் பயணம் செய்பவர். அவர் சொன்ன பதில் நெஞ்சைத்தொட்டது...?

"ஐயா பெரியவரே அவருக்கு மோட்சம் தான் கிடைக்கும். காரணம் மாதம் தோறும் இப்படி கொடுக்க முடியாத சில்லறை காசுகளைச் சேர்த்து எமது அநாதை இல்லத்துக்கு கொண்டு வந்து தருவார்" என்றார்.

முதியவர் பஸ்ஸைவிட்டு இறங்கும்போது நடத்துநரின் கையை முத்தமிட்டுச் சென்றார்.

யாரையும் தவறாக எடை போடக்கூடாது!

## உதயசூரியன் பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் - | தயாஸ்ரீ ஜயசேகர |
| நிரந்தரத் தொழில் - | சட்டத்தரணி |
| எதிர்பார்க்கும் பதவி - | வடமேல் மாகாண முதலமைச்சர் (கிடைக்குமா?) |
| தற்போதைய தொழில் - | மஹிந்த அரசிற்கு ''கூஜா'' தூக்குவது |
| நண்பர்கள் - | ரணிலுடன் முறைத்துக் கொண்டு மஹிந்த அரசுடன் கைகோர்த்து பதவி பெற்றுக்கொண்டவர்கள். |
| ஒரே எதிரி - | தலைவர் பதவி மோகத்தில் கட்சியை சுக்கு நூறாக்கும் அவர் (ஓ.... அவரா?) |
| அன்று கூறியது - | மஹிந்த ஆட்சியில் சர்வாதிகாரம் நடக்கிறது என்று |
| இன்று கூறுவது - | ரணில் போல சர்வாதிகாரி யாருமல்ல (கட்சி தாவுவதற்கு கூறும் காரணமா?) |
| ஒரே கவலை - | நான் சில ''கோடிகளுக்கு'' கட்சி தாவி விட்டதாக சிலர் விமர்சிப்பது (அப்படியா) |
| கோபப்படுவது - | ஐ.தே.க. வை இல்லாமல் செய்துகொண்டிருக்கும் அவரை(?) இன்னும் தலைவராகக் கொண்டாடு பவர்கள் மீது (பாவம்... அவர்களும் என்ன தான் செய்வார்கள்) |
| நகைச்சுவை - | ஹா....ஹா ஐ.தே.க. இம் மாகாணசபைகளில் மாபெரும் வெற்றி பெறும் என கதையளப்பது (மக்களுக்கு புளித்துப்போன விடயம்தானே?) |
| தற்போது பிடித்தது - | மஹிந்த அரசிற்கு விசிறி வீசுவது கடைக்குச் செல்வது (நிறையப் பேர் அப்படித்தான்) |
| ரணிலுக்கு கூறுவது - | மீதமிருக்கும் உறுப்பினர்களையும் அனுப்பி விட்டு தனி இராச்சியம் நடத்தும்படி (அதைத் தானே செய்து கொண்டிருக்கிறார்) |

(யாவும் கற்பனை) எம். தாசன்



## காணவில்லை



பதுளை கிளன் அல்பின் பிரிவுக்குட்பட்ட தெய்வக்கன்னி தோட்டத்தில் வசித்து வந்த முத்தையா கணேஷன் (வயது 63) என்பவரை கடந்த வெள்ளிக்கிழமை 26 ஆம் திகதி நண்பகலில் இருந்து காணவில்லையென பதுளை பொலிஸ் நிலையத்தில் குடும்பத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவதினம் நண்பகல் வேளையில் வீட்டிலிருந்து சென்றவர் இவர் இதுவரை வீடு திரும்பவில்லை. சிறிது காலம் மனநிலை பாதிக்கப்பட்டு சுகயீனமுற்றிருந்த இவர் பின் நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருந்ததாகவும் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இறுதியாக இவர் வெள்ளை நிறத்தில் கட்டம் போட்ட மேற்சட்டையும், நீல நிற சாரமும் அணிந்திருதார். இவர் குறித்த தகவல்கள் தெரிந்தால் 0770635979 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு குடும்பத்தினர் கேட்டுள்ளனர்.







பத்தனை பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாட்டில், வேல்ட் விஷன் நிறுவனத்தின் நிதி உதவியின் ஊடாக நுவரெலியா கல்வி வலயத்தின் கோட்டம் இரண்டிற்கு உட்பட்ட பாடசாலை களுக்கான தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு எதன்சைட் தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் 23 பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட கல்விப்பணிப்பாளர் அமரசிறிபியதாச மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

**அக்கரப்பத்தனை நிருபர்**

### சிந்தனைத் துளி

வழி தவறிச்
சென்றுவிட்டால்
திரும்பி வரலாம்.
வாய் தவறி
பேசிவிட்டால்
திரும்பப் பெற
முடியாது.

**தேவை**

18க்கும் 40க்கும் இடைப்பட்ட வயதுடைய சிங்களமொழி பேசக்கூடிய பெண்கள் வீட்டுப் பணிகளுக்குத் தேவை.
சம்பளம் : ரூ. 15,000/- இலிருந்து மேலும் கூடுதலாக வழங்கப்படும். தொடர்பு:
☎ : 0724148313



# புதிர் BOX

## கண்ணாமூச்சி




01



02




03



04



## சூப்பர் ஆப்பர்






a

சரண்யா



b

ஹன்சிகா



c

சுவாதி





## பெரியவங்க சொன்னது!

* புன்னகையை விட மலிவான ஒப்பனை சாதனம் உலகில் எதுவும் இல்லை.
* நிபந்தனையுடன் செய்யப்படுவது உதவியல்ல, அது வணிகம்.
* தனக்கென வாழ்வது இன்பம். பிறருக்காக வாழ்வது பேரின்பம்.
* உன் கனவுகளில் நல்ல அம்சம் இருந்தால் அது நிச்சயம் பலிக்கும்.
* நம்பிக்கையும் முயற்சியும் இரட்டைக் குழந்தைகள். நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சி இருக்காது.

புதிர் BOX பகுதிக்கான உங்கள் விடைகளை 02 ஆம் பக்கத்தில் உள்ள எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## வார்த்தைப் புதிர் - 68



### இடமிருந்து வலம்

01. இராமாயணத்திற்கும் இவருக்கும் முக்கிய தொடர்பு உண்டு.
06. சுறுசுறுப்புக்கு பெயர் பெற்ற பிராணி...
09. வெட்டுவதற்கு பயன்படும் உபகரணம் கடைசி எழுத்து இங்கே இல்லை. 10. இது வாழ்க்கைக்கு மிக முக்கியம்.
12. நீரில் வாழும் பிராணி. 13. அழகுக்கு இவள்தான் உதாரணம். 14. எதிரி
15. நுளம்புகளால் பரவும் ஒரு வகைக் காய்ச்சல்.
16. சுமை அல்லது மூடை என்று சொல்லலாம்.
17. வானத்தை அலங்கரிப்பது.
20. இனிய இசை தரும் ஒரு துளைகருவி
22. பேருந்து என்பதை இப்படியும் அழைக்கலாம்.

### வலமிருந்து இடம்

04. வாழ்க்கையை வெற்றிகரமாக கொண்டு செல்ல . இது அவசியம்.
05. மனிதனின் முக்கிய உறுப்பு
19. வாய், உதடு. (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. உண்மை 02. தண்ணீர் பெறும் நீர் நிலை ஒன்று
03. அடிக்கப் பயன்படும்.
04. கல்வி, செல்வம், வீரம் வேண்டி அனுஷ்டிக்கப்படும் ஒரு விரதம். 07. கொல்லாமையையும் அஹிம்சையையும் போதித்தவர்.
08. இது போனால் சொல் போச்சு என்று ஒரு பழமொழி உண்டு
10. எறும்பு வகைகளில் ஒன்று. 11. அடுப்பெரிக்க உதவும்.
13. துப்பாக்கியிலும் இருக்கும். ஒரு உணவுப்பொருளும் இப்பெயர்கொண்டு அழைக்கப்படும்.
18. ..... உம் வேலும் பல்லுக்குறுதி

### கீழிருந்து மேல்

05. சில விலங்குகளுக்கு உள்ள ஒரு உறுப்பு
12. அகத்தின் அழகைக் காட்டும் கண்ணாடி இது .
19. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்படுபவர்.
21. தாக்கத்தின்போது வெளிப்படுவது.
22. தவமிருந்து பெறுவது. (குழம்பியுள்ளது)
23. இசைக்கு இது முக்கியமானது.

# மின்சாரசபை மக்களை இருட்டில் தள்ளுகின்றதா?



வடக்கின் அபிவிருத்தி என்ற பெயரில் வடபகுதியில் பட்டிதொட்டியெங்கும் மின்சாரம் வழங்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா நகரின் பல பகுதிகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட மின்சாரம், வவுனியா மின்சார சபையின் அதிரடி நடவடிக்கையால் துண்டிக்கப்பட்டு பலரது வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள மின்பாவனையாளர்கள் பலர் உரிய காலப்பகுதிகளில் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தாமையால் மின்சாரக் கட்டண நிலுவை அதிகமாகியுள்ளது. இதன் காரணமாக அதனை வாடிக்கையாளரிடம் இருந்து பெறும் முகமாக மூன்று மாத நிலுவையை கொண்டவர்களது மின் இணைப்புகள் துண்டிக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட மின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையில், நிலுவை உள்ள மின் இணைப்புகளை துண்டிக்கும் நடவடிக்கையில் வவுனியா மாவட்ட மின்சாரசபை ஈடுபடுகின்றது. இதன்போது மின்சாரசபையின் சில உத்தியோகத்தர்களது பொறுப்பற்ற தன்மைகளும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வவுனியா மின்சாரசபையின் பாவனையாளராக இருக்கும் திருநாவற்குளத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அரச ஊழியரான இ.பத்மநாதன் கூறுகையில்;

எனக்கு இப்ப 60 வயசு. என்ர மனிசியும் ஒப்பரேசன் செய்து வீட்டில இருக்கிறா. எனக்கு வவுனியா மின்சார சபையால் எனது மின்சார கட்டண நிலுவையாக 13,223 ரூபா இருப்பதாகவும் உடனடியாக செலுத்தி மின் துண்டிப்பை தவிர்க்குமாறும் றெட் நோட்டீஸ் வந்தது. உடனே வவுனியா மின்சாரசபையின் பிரதான காரியலயத்திற்கு கடந்த 24 ஆம் திகதி போய் 13,500 ரூபாய் கட்டினேன். இந்நிலையில் கடந்த 30 ஆம் திகதி வவுனியா மின்சாரசபையில் இருந்து வந்த உத்தியோகத்தர்கள் எனது வீட்டுக்கான மின்சாரத்தை துண்டிக்கப் போவதாகக் கூறினர்.

அப்பொழுது கட்டணம் செலுத்திவிட்டதாகவும் செலுத்திய பற்றுச் சீட்டை எங்கேயோ வைத்துவிட்டேன் எடுத்து காட்டுறேன் எனக் கூறினேன். ஆனால், அவர்கள் பலவந்தமாக மின் இணைப்பை துண்டித்து விட்டு சென்றுவிட்டார்கள். காசு மேலதிகமாகக் கட்டியும் இயலாத வயசில இருட்டில இருக்கிறன் என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

குறித்த வாடிக்கையாளர் மின்சார கட்டணங்களை மேலதிகமாக செலுத்தியிருந்தும் அவரது இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா மின்சார சபைக்கு உடனடியாக தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியபோதும் இச்செய்தி அச்சுக்கு செல்லும் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது இவ்வாறு இருக்க, மின்சார பட்டியல்களை வழங்கவரும் உத்தியோகத்தர்கள் சிலர் மின்மானியின் மீற்றர்களை பார்க்காது பாவித்த கூறுகளையும், மாத விதிப்பனவுகளையும் குறிப்பதாகவும் இதன்காரணமாக சிலர் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில், எஸ்.கனகேஸ்வரி என்பவர் கூறுகையில்;

நாங்க மின்சாரத்தை குறைத்து பாவித்தாலும் பழைய பில் கணக்குக்கு தொடர்ந்து வந்தது. ஏன் என்று பார்த்த போதுதான் மின்சாரப் பட்டியல் கொடுக்க வரும் உத்தியோகத்தர் எங்கட மீற்றர் மானியை பார்க்காமல் பழைய பில் கணக்குக்கு தொடந்து போடுறார் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு அசமந்த போக்குடன் செயற்படும் சில உத்தியோகத்தர்களால் பொருளாதாரப் பிரச்சினைக்கு மத்தியிலும் சிலர் மேலதிகமான பணத்தை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர, கடந்த வெள்ளிக்கிழமை குருமன்காட்டில் உள்ள ஒரு வீட்டுக்கு மின்சார நிலுவையை உடனடியாகச் செலுத்துமாறு அறிவுறுத்தல் கடிதம் சென்றுள்ளது. வெள்ளிக்கிழமையைத் தொடர்ந்து விடுமுறை நாட்கள் வந்தமையால் திங்கள் மின்சார பட்டியலை செலுத்துவதாக வவுனியா மின்சார சபைக்கு குறித்த வீட்டின் மின் பாவனையாளர் தெரியப்படுத்தியுள்ளார். அவ்வேளை அதனை ஏற்றுக் கொண்ட மின்சார சபை மறுதினம் (சனிக்கிழமை) அவ் வீட்டுக்கான மின் இணைப்பை துண்டித்துள்ளது. இவ்வாறு மின்சார சபையால் மேற்கோள்ளும் பொறுப்பற்ற செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

மின்சார நிலுவைகளைப் பெறுவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை சரியானதாக இருக்கின்றபோதும், அதனை பொறுப்பற்ற விதத்தில் அசமந்தப்போக்குடன் செய்வதனால் பலர் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள நிலையில், பல வீடுகளின் மின் இணைப்புகள் துண்டிக்கப்படுவதனாலும், பொறுப்பற்று செயற்படுவதனாலும் மாணவர்கள் இரவு நேரங்களில் படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பல மாணவர்களின் எதிர்காலம் தொடர்ச்சியாக இருட்டில் மூழ்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளே, நீங்கள் உங்கள் கடமையை செய்யுங்கள். ஆனால், அதனை பொறுப்புடன் செய்து மக்களை வெளிச்சத்துக்கு கொண்டு வாருங்கள்.

-கே.வாசு







# நையப்புடைக்கப்பட்ட மாலக சில்வா!

## இதற்கெல்லாம் காளிதேவியின் சாபமா?

## சீறியெழுந்த தந்தை மேர்வின் சில்வா!

நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை என்றொரு பழமொழி உண்டு. ஆனால் இதைக் கொஞ்சம் மாற்றி தந்தையைப் போல பிள்ளை என ஆட்சியிலிருக்கின்றவர்களின் பிள்ளைகள் அவ்வப்போது எமக்கு ஞாபகமூட்டி வருகின்றனர்.

சில அமைச்சர்களின் மகன்மார் தந்தையின் அரசியல் பலத்தை கையிலெடுத்துக்கொண்டு செய்யும் அட்டகாசங்கள் அவ்வப்போது வெளிவருகின்றன. இவ்வாறான அடாவடித்தனங்கள் ஆட்சியாளருக்கு பெரும் தலையிடியாக இருப்பதும் உண்மை.

இதேவேளை ஆசிரியையை முழந்தாளிடவைத்த சம்பவம் முதல் இலஞ்சம் வாங்கி கையும் களவுமாக சிக்கிக்கொள்கின்ற பிரதேச அரசியல்வாதிகள் வரை மக்கள் பிரதிநிதிகளின் சமூகவிரோத செயற்பாடுகள் கொஞ்சக்காலமாக அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

முதல் கோணல் முற்றிலும் கோணல் என்றாற்போல, அரசியல்வாதிகள் தவறிழைகின்ற முதல் சந்தர்ப்பத்திலேயே அவருக்கு எதிராக கடும் நடவடிக் கையை எடுத்து முன்மாதிரியாகத் திகழ்ந்திருந்தால் அரசியல்வாதிகளின் சமூகவிரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம் என்பது பலரதும் கருத்தாகும்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மகன் கிழக்கில் ஹோட்டல் ஒன்றில் மேற்கொண்டதாக கூறப்படும் தாக்குதல், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் மாத்தளை பகுதியில் சிறுவன் மீது மேற்கொண்டதாக கூறப்படும் துப்பாக்கி பிரயோகம், அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் இராணுவ மேஜர் ஒருவரின் மீது மேற்கொண்டதாக கூறப்படும் தாக்குதல் என பட்டியல் நீண்டுகொண்டே போகின்றதே தவிர அந்த சம்பவங்களின் பின்னணியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பூச்சியமாகவே இருக்கிறன.

இவ்வாறான சம்பவங்களின் பின்னணியிலேயே பொதுமக்கள் உறவுகள் துறை அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனாக மாலக்க சில்வா 12 பேர் கொண்ட இனந்தெரியாத குழுவொன்றினால் கூரிய ஆயுதங்களைக் கொண்டு கடந்த திங்கட்கிழமை பட்டப்பகலில் தாக்கப்பட்டுள்ளார். அவருடைய முகத்தை வெற்று போத்தல்களும் பதம்பார்த்துள்ளன.



தாக்குதலில் படுகாயமடைந்த அவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார், அவரை நையப்புடைத்த குழுவினர் அங்கிருந்து முச்சக்கரவண்டி மற்றும் கறுப்பு நிறத்திலான டிப்பெண்டர் ரக வாகனத்தில் தப்பிச்சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு-7 பகுதியிலுள்ள ஒடேல் பிரபல ஆடை விற்பனை நிலையத்தின் வாகனத் தரிப்பிடத்தில் வைத்தே மாலக்க சில்வா தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

தொடர்ச்சியாக சர்ச்சைகளில் சிக்கி வந்துள்ள மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க ஈரான் நாட்டு காதலியுடன் ஒடேல் ஆடை விற்பனை நிலையத்திற்கு அன்று பிற்பகல் 3 மணியளவில் சென்றுள்ளார். அங்குள்ள சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று இருவரும் உணவருந்தியுள்ளனர்.

அதன்பின்னர் வாகன தரிப்பிடத்திலுள்ள வாகனத்தில் ஏறுவதற்கு தயாரான நிலையிலேயே இந்தத் தாக்குதல் மாலை 4.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த ஆடைவிற்பனை நிலையத்திலிருந்து மாலக்க வெளியேறுகையில், நீயா மாலக்க? உன்னுடன் ஒரு பகைமையை தீர்த்துக்கொள்ளவேண்டியிருக்கிறது வருகிறாயா? என்று ஒருவர் கேட்டதாகவும் அதன் பின்னரே வாகனத்திற்கு அருகில் வந்த கும்பல் அவரைத்தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. காதலன் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தப்படுவதைக் கண்ட அவரின் ஈரான் நாட்டு காதலி கத்தி கூச்சலிட்டு அங்கிருந்தவர்களை உதவிக்கு அழைத்துள்ளார். அவர்கள் வருவதற்குகிடையில் குழுவினர் கச்சிதமாக தங்களுடைய வேலைகளை முடித்துக் கொண்டு வாகனங்களில் ஏறி தப்பிச்சென்றுவிட்டனர்.

- தொடர்ச்சி 25 ஆம் பக்கம் -

# பிரித்தானியாவின் எதிர்கால மன்னர் ஜோர்ஜ் இளைஞனாக

## கணனி நிபுணரின் கைவண்ணத்தில் உருவப்படம்



பிரித்தானிய கேம்பிரிட்ஜ் சீமாட்டி கேட் வில்லியம் கர்ப்பமாக இருந்தபோது அவருக்கு பிறக்கப் போகும் குழந்தை எவ்வாறான தோற்றத்தில் இருக்கும் என உலகிலுள்ள ஓவியக் கலைஞர்கள் பலரும் ஓவியங்களை வரைந்திருந்தனர்.

தற்போது கேட் பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசரான ஜோர்ஜ் அலெக்ஸாண்டர் லூயிஸை பிரசவித்த பின்னர் அமெரிக்காவைச் சேர்ந்த உருவப்பட ஓவிய நிபுணரும் புகைப்படக் கலைஞரும், கணனி வல்லுநருமான கலாநிதி லைன் வோல்ட்ரன் பாலகனான இளவரசர் ஜோர்ஜ் இளவயது பருவத்தை அடைந்ததும் எவ்வாறு இருப்பார் என்பதை வெளிப்படுத்தும் உருவப்படத்தை கணனியைப் பயன்படுத்தி வடிவமைத்துள்ளார்.

தனது தாயின் மூக்கு, தனது தந்தையின் கண்கள், வாய் மற்றும் நாடி மற்றும் தடித்த இமைகள் என்பவற்றை இளவயதினரான இளவரசர் ஜோர்ஜ் கொண்டிருப்பதாக மேற்படி உருவப்படத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

பரம்பரையியல், வாழ்க்கை முறைமை, தனிமனித ஆளுமை மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றைக் கவனத்திற் கொண்டே இந்த ஓவியத்தை வரைந்ததாக வோல்ட்ரன் கூறினார்.

ஏற்கெனவே வோல்ட்ரன் பிரித்தானிய இளவரசி டயானா ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோ மற்றும் பிரபலங்கள் பலரை ஓவியமாக வரைந்துள்ளார்.

## இராட்சத டைனோசர் எலும்புக்கூடு மெக்சிக்கோவில் கண்டுபிடிப்பு

தொல்பொருள் ஆய்வாளர்கள் குழு, வடக்கு மெக்ஸிக்கோ பாலைவனத்தில் ஒரு 72 மில்லியன் வயதான டைனோசர் கண்டுபிடித்துள்ளது. இது பல உயிர்களை விழுங்கியுள்ளதாம். டைனோசர் ஆய்வாளர்களின்



கருத்தின்படி ஒப்பீட்டளவில் இது அரிதாகவே இருக்கிறது.

டைனோசர் மெக்ஸிக்கோ வடக்கு பாலைவன Coahuila மாநிலங்களில் கூடுதலாக காணப்படும். 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முடிவடைந்த கிரிட்டாசியஸ் காலத்தில் இது இறந்துள்ளது. இதைப் பற்றிய உண்மைகள் சில ஜூன் 2012 ஆம் ஆண்டில் உள்ளூர் மக்களால் தெரிவிக்கப்பட்டது. ஆரம்ப ஆய்வுகள் இந்த மாதம் தொடங்கியது. எஞ்சியுள்ள ஆய்வுகள் தொடர வாய்ப்புள்ளது.




## 75 நாட்கள் தலைகீழாகத் தொங்கி குழந்தை பெற்றெடுத்த கர்ப்பிணி



போலந்து நாட்டைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் பெரிய சாதனையை நிகழ்த்தி தனது இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். போலந்து நாட்டைச் சேர்ந்தவர் ஜோவன்னா. கர்ப்பமாக இருந்த அவரது வயிற்றில் 3 குழந்தைகள் இருந்தது தெரியவந்தது. இந்த நிலையில் 5 மாத கர்ப்பமாக இருந்த நிலையில் அவருக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அப்போது ஒரு குழந்தை இறந்தே பிறந்தது. ஆனால், வயிற்றில் உள்ள மற்ற 2 குழந்தைகளையும் காப்பாற்ற முடிவெடுத்த மருத்துவர்கள், அதற்காக சில அசாதாரணமான யோசனைகளைத் தெரிவித்தனர்.

அதை ஏற்றார் ஜோவன்னா. அதன்படி அவர் கிட்டத்தட்ட 75 நாட்கள் தலைகீழாக வைக்கப்பட்டார். இதற்கான படுக்கையையும் அதற்கேற்ப மாற்றியமைத்தனர். வயிற்றில் இருக்கும் குழந்தைகள் தொடர்ந்து உயிருடன் இருக்க வேண்டும் என்றால் ஜோவன்னா 24 மணி நேரமும் தலைகீழாக இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

அவரும் ஒப்புக்கொண்டு தலைகீழாகவே 75 நாட்களை கழித்தார். அதன்பிறகு பிரசவம் நடந்து 2 குழந்தைகளை மருத்துவர்கள் பத்திரமாக வெளியே எடுத்தனர். அதில் ஒன்று ஆண், இன்னொன்று பெண். ஆண் குழந்தைக்கு இக்னேசி என்றும், பெண் குழந்தைக்கு இகா என்றும் பெயர் சூட்டியுள்ளார் ஜோவன்னா.

தற்போது இரு குழந்தைகளையும் சிறப்பு இன்குபேட்டரில் வைத்துள்ளனர். விரைவில் ஜோவன்னா தனது குழந்தைகளுடன் வீடு திரும்பலாம் என மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

## 25 விரல்களுடன் பிறந்த அதிசயக் குழந்தை



இந்தியாவில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஒரு தம்பதியினருக்கு பிறந்த ஆண்குழந்தை அப்பகுதி மக்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. காரணம் இந்தக் குழந்தை 25 விரல்களைக் கொண்டிருக்கிறது. நல்ல சிகப்பு நிறத்தில் பிறந்த குழந்தையின் வலது கையில் 7 விரல்களும், இடது கையில் 6 விரல்களும், இரு கால்களிலும் தலா 6 விரல்களும் ஆக மொத்தம் 25 விரல்கள் இருப்பதைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# தயாசிறி அடித்த அந்தர் பல்டியும்; ரணிலின் வங்குரோத்து அரசியலும்

ஐ.தே.க.வில் இருந்து ஆளும்கட்சிக்கு மீண்டும் ஒரு கட்சித் தாவல், தான் கட்சியின் தலைவரான பின் ரணில் பறிகொடுத்த 62 ஆவது பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

கடந்தவாரம் அரங்கேறிய கட்சித் தாவலுடன் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. பலமான எதிர்க்கட்சி இருந்தால் தான் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடக்கும். இல்லையேல் அது சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர்த்திவிடும் என அரசியல் நியதி கூறுகையில், இலங்கையில் பலமான எதிர்க்கட்சியை விடுத்து எதிர்க்கட்சி ஒன்று இருக்கின்றதா? என நகைப்பாக கேள்வி கேட்குமளவிற்கு ஐ.தே.க.வின் பலம் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கின்றது.

ஐ.தே.க.வின் தலைமைப் பீடத்தின் வங்குரோத்து அரசியலால் ஆளும் கட்சியின் அதிகார காய் நகர்த்தலுக்கு முன்னால் ஐ.தே.க. மண்டியிட்டு மண்ணை கௌவிக்கொண்டிருப்பது யாவரும் அறிந்த உண்மை.

பலமற்ற எதிர்க்கட்சியால் எவ்வித பிரயோசனமும் இல்லையென மக்கள் மத்தியில் ஐ.தே.க. மீது நம்பிக்கை இழந்துவரும் நிலையில் மீண்டும் ஒரு கட்சித் தாவல் மக்கள் மத்தியில் சலனத்தையும், சலசலப்பையும் ஏற்படுத்திவிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியையும், கெபினட் அமைச்சரவையையும் கடுமையாக விமர்சனம் செய்து மக்கள் மத்தியில் பிரபலமானவர் குருநாகல் மாவட்ட ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர. இவர் கடந்தவாரம் ஐ.தே.க.வின் தலைவரின் செயற்பாடுகளால் தான் அதிருப்தியுற்று கட்சியைவிட்டு விலகி அதனுடன் இணைந்துகொள்வதாகக் கூறி மஹிந்த அரசுடன் சங்கமமாகிவிட்டார்.

ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தயாசிறிக்குமிடையில் கடந்த 1-1/2 வருடங்களாக உட்கட்சிப்பூசல் பனிப்போராக இருந்துவந்த நிலையிலேயே கடந்தவாரம் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு அரசாங்கம் சார்பாக வடமேல் மாகாண முதலமைச்சர் பதவிக்கு களமிறங்கப் போவதாக அறிவித்துள்ளார். ஐ.தே.க.வின் தலைவர் பதவியில் மாற்றம் தேவை. சஜித் பிரேமதாசவிற்கு அதிகாரம் கொடுக்கப்படல் வேண்டும். நலிந்து போயிருக்கும் ஐ.தே.க.வின் வாக்கு வங்கியை தூக்கி நிறுத்த இதுவே சிறந்த முடிவாக இருக்குமென ரணிலுக்கு எதிராக தயாசிறி போர்க்கொடி தூக்கியிருந்தார். இது எதையும் காதில் போட்டுக்கொள்ளாமல் தனது நாற்காலியை பாதுகாப்பதிலேயே ரணில் முனைப்பு காட்டினார். கட்சி யாப்பில் சில மாற்றங்களை கொண்டுவந்து ஆறு வருடங்கள் தொடர்ந்தும் தலைவர் பதவி வகிக்கும் வகையில் தீர்மானங்களை தனக்கு சாதகமாக நிறைவேற்றிக் கொண்டார்.

ரணிலின் இந்த நாற்காலி ஆசையால் ஐ.தே.க.வுக்குள் கடும் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. ரணிலுடன் ஏற்பட்ட முறுகல் நிலையை மஹிந்த அரசு தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு சில வெகுமதிகளுடன் (?) தயாசிறியை தம் பக்கம் வளைத்துப்போட்டுக் கொண்டதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. தலைவர் பதவி மோகத்தாலும் விட்டுக் கொடுக்க மனமில்லாததாலும் ஐ.தே.க.வின் தீவிர விசுவாசிகள் கட்சியை விட்டு வெளியேறி அமைச்சுப் பதவிகளை பெற்று வருகின்றமை இன்றுவரை தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.



ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவராக பொறுப்பேற்றபின் கட்சியிலிருந்து பிரிந்து அரசுடன் இணைந்துகொள்ளும் 62 ஆவது நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர என்பது முக்கியமான விடயம். 100 இற்கும் மேற்பட்ட மாகாண, பிரதேச சபை உறுப்பினர்கள் ஐ.தே.க.வில் இருந்து இதுவரை பிரிந்துசென்றுள்ளனர். இதெல்லாம் ரணில் விக்கிரமசிங்கவின் வங்குரோத்து அரசியலுக்கு கிடைத்த பரிசு என்றுதான் கூறவேண்டும். ஐ.தே.க.வுடன் இனி ஒட்டும் இல்லை, உறவும் இல்லையென கட்சியைவிட்டு விலகியபின் தயாசிறி ஊடக மாநாட்டில் தெரிவித்த கருத்துகள் இவைதான்.

ஐ.தே.க. காய்க்காத மரமாக மாறியுள்ளது. கட்சியின் தலைமை (ரணில்) மீது அதிருப்தி கொண்டு பெருமளவான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்துகொள்வார்கள். தற்போதைய அரசாங்கத்தை இன்னும் 10 வருடங்களுக்கு யாரும் அசைக்க முடியாது. ரணிலுடன் ஒப்பிடுகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என் கண்களுக்கு சர்வாதிகாரியாக தெரியவில்லை. கட்சியின் சர்வாதிகார தனத்தாலேயே நான் கட்சி மாறுகின்றேன் எனத் தெரிவித்தார்.

சட்டத்தரணியான தயாசிறி ஜயசேகர கடந்த பொதுத்தேர்தலில் (2010 ஆம் ஆண்டு) குருநாகல் மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பாக போட்டியிட்டு 1 இலட்சத்து 32 ஆயிரத்து 990 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். மக்கள் மத்தியில் மிகப் பிரபலமான தயாசிறி ஐ.தே.க.வை விட்டு பிரிந்து சென்றமை கட்சிக்கு பின்னடைவான செயற்பாடே என விமர்சனங்கள் தெரிவிக்கப்படுவதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவின் முதுகெலும்பில்லாத தலைமைத்துவத்தினாலேயே கட்சி உறுப்பினர்கள் பிரிந்து செல்வதாக கடும் விமர்சனம் தெரிவிக்கப்பட்டாலும் ரணில் விக்கிரமசிங்க அதை கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. அவருடைய ஒரே எண்ணம் தனது தலைமை பொறுப்பு பறிபோய்விடக்கூடாது என்பதே. ரணில் மீது அதிருப்தியுற்று இருக்கும் சஜித் பிரேமதாச, சுஜீவ சேனசிங்க, ரோசி சேனநாயக்க, தலதா அத்துகோரல போன்றவர்கள் எதிர்காலத்தில் கட்சி மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

போகிற போக்கைப் பார்த்தால் ஐ.தே.க.வில் இருந்து அனைவரையும் அனுப்பிவிட்டு கட்சியை இழுத்து மூடிவிடும் எண்ணத்தில் ரணில் விக்கிரமசிங்க செயற்படுவதாக எமது ஊடக நண்பர் ஒருவர் நகைச்சுவையாகக் கூறியதையும் இங்கு பதிவுசெய்ய விரும்புகின்றோம்.

எம்.தாசன்

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்
வித்யாதரம்
கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

# தரம் – 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை – 2013

வினாப்பத்திரம் - I | நேரம் :- 45 நிமிடம் | மொத்தப்புள்ளி :-


இவ்வினாப்பத்திரத்திற்கான விடைகளை 15ஆம் பக்கம் பார்க்கவும்

★ 1 தொடக்கம் 34 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

**★ 1 ஆம் 2 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பாடலை வாசித்துப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

1) ஊரெல்லாம் வாழ்ந்திடுவேன்
ஊருக்கெல்லாம் உணவளிப்பேன்
சூழல் தனைக் காத்திடுவேன்
தூய காற்றைத் தந்திடுவேன்.



1.


2.


3.

2) டக் டக் சத்தம் போட்டிடுவேன்
நாலு காலால் ஓடிடுவேன்
கொள்ளும் புல்லும் தின்றிடுவேன்
சவாரி செய்ய உதவிடுவேன்.


1.


2.


3.

3) **நாங்கள் பழங்களை உண்ண வேண்டும். இதற்குக் காரணம்.**
1. பழங்கள் தேகாரோக்கியத்திற்கு அவசியமானவை.
2. பழங்கள் மிகவும் சுவையானவை.
3. பழங்கள் பல வண்ணங்களில் காணப்படுகின்றமை.

4) **சிறுவர்கள் கல்வி கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம்.**
1. படிக்காவிட்டால் தண்டனை கிடைக்கும் என்பதால்
2. ஆற்றலும் அறிவும் மிக்க சிறுவர்களை உருவாக்குவதற்கு
3. அரசு வேலை வழங்குவதற்கு

**★ ஒவ்வொரு உருவிலும் மூன்று வட்டங்கள் யாதாயினும் ஓர் தொடர்பை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி 5ஆம் 6ஆம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.**




5) **பூக்கள் , சிவப்பு நிறப் பூக்கள், மஞ்சள் நிறப் பூக்கள் ஆகியவற்றுக்கிடையேயுள்ள தொடர்பைக் காட்டுவது.**
1. A   2. B   3. C

6) **கோழிகள், பறவைகள், உயிருள்ளவை ஆகியவற்றுக்கிடையேயான தொடர்பைக் காட்டுவது.**
1. A   2. B   3. C

**★ கட்டத்திலுள்ள இலக்கங்கள், எழுத்துக்களை அவதானித்து 7ஆம் 8ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.**

C 9 A B 4 A 5 A 5 C D C 3 E A F 2

7) **ஒரே ஆங்கில எழுத்துக்களுக்கு நடுவில் வரும் இலக்கத்தின் இரு மடங்கு.**
1) 8   2) 10   3) 6

8) **மிகச் சிறிய இலக்கத்தை மிகப்பெரிய இலக்கத்தால் பெருக்கும் போது கிடைக்கும் பெறுமானம்.**
1) 27   2) 36   3) 18

9)


| படிமுறை | எடுக்கும் காலம் |
|---|---|
| தேவையான பொருட்களைச் சேகரித்தல் | 40 நிமிடங்கள் |
| உருவத்தை வரைதல் | பொருள் சேகரிக்க எடுத்த நேரத்தின் காற்பங்கு நேரம் |
| வர்ணக் கடதாசிகளைக் கிழித்து ஒட்டுதல் | உருவம் வரைய எடுத்த நேரத்தின் மூன்று மடங்கு |

**தரப்பட்டுள்ள மூன்று படிமுறைகளின் கீழ் ஒட்டுச்சித்திரமொன்றை ஆக்குவதற்குத் திட்டமிடப்பட்டது. காலை 11.30 மணிக்கு மேற்படி செயற்பாடு ஆரம்பித்தது எனின் ஒட்டுச் சித்திரம் நிறைவு செய்யப்பட்ட நேரத்தை தெரிவு செய்க.**

1. பி.ப 12.40  2. பி.ப 12.50  3. பி.ப 1.50


**10) கீழே தரப்பட்டுள்ள உருவானது நீளமான கடதாசிக் கீலமொன்றை மடித்து அமைக்கப்பட்டுள்ளது. அதனை அமைக்க பயன்படுத்திய கடதாசிக் கீலத்தைத் தெரிவு செய்க.**



1.   2.   3. 


**★11 ஆம் 12 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் ( ? ) பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவு செய்க.**

**11)**





1) 1  2) 3  3) 9

**12)**




1) 4  2) 6  3) 5

**13)**






**உருவில் காணப்படும் வடிவம் உள்ள தாளை முறிகோடுகள் வழியே இரண்டாக மடித்துப் புள்ளிக்கோடுகள் வழியே வெட்டிய பின்னர் கிடைக்கும் வடிவங்களின் எண்ணிக்கை யாது?**

1. 4 முக்கோணிகள்  2. 6 முக்கோணிகள்  3. 3 முக்கோணிகள்

**14) முதலில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு இரண்டாக மடிக்கப்பட்ட கடதாசித் துண்டைச் சரியாக வெட்டப்படவேண்டிய விதத்தை தெரிவு செய்க.**



1.   2.   3. 

**★ 15ஆம் 16ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவு செய்க.**


**15) "ஒருவன் தான் படைத்தது குற்றமுடையதாயினும் அதனை மிக விரும்புவது இயற்கை" எனுங் கருத்தை வெளிப்படுத்துவது.**

1. தன் குற்றம் தனக்குத் தெரியாது.  2. தானாடாது போனாலும் தசையாடும்  3. காக்கைக்குந் தன்குஞ்சு பொன் குஞ்சு

**16) "பின்னுக்கு வரப்போகும் அபாயத்தை முன் யோசனையோடு தடுக்க முயல வேண்டும்" எனுங் கருத்தைத் தருவது.**

1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
2. வெள்ளம் வருமுன்னே அணை கோல வேண்டும்.
3. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.

**17) வெட்டப்பட்ட செவ்வகமொன்றின் சில துண்டுகள் பின்வரும் உருக்களில் காணப்படுகின்றன.**



A B C D

செவ்வகம் ஒன்றை ஆக்குவதற்கு மிகப் பொருத்தமான அட்டைத் துண்டுகளைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

1. B,D,C  2. A,D,C  3. A,D,B

**18) மாணவர் ஐவரின் வயது, நிறை என்பன அட்டவணையில் தரப்பட்டுள்ளன. மாணவர்களின் நிறைகளை ஒழுங்கு வரிசையில் குறிப்பது**

| மாணவர் | வயது | நிறை Kg |
|---|---|---|
| A | 11 | 31 |
| B | 13 | 35 |
| C | 10 | 26 |
| D | 12 | 27 |
| E | 14 | 30 |

1. C,D,E,A,B  2. D,A,C,B,E  3. A,B,C,D,E

**★பாடலை வாசித்து 19ஆம் 20 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**

செங்கதிர் பொங்கி வருவதுண்டு - நல்ல
செந்தா மரைகள் மலர்வதுண்டு
மங்கையே! காலைப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி ?

**19) இப்பாடல் கூறும் பிரதான கருத்து**

1. சூரியன் பொங்கி எழுதல்  2. தாமரைகள் சூரியனை வரவேற்றல்  3. பொழுதை அறிந்திட மணிக்கூடு தேவையில்லை

**20) "செங்கதிர் பொங்கி வருதல்" என்பதன் கருத்து**

1. வெண்ணிற ஒளி எங்கும் பரவுதல்  2. சிவந்த ஒளிக்கீற்றுக்கள் மேலெழுதல்  3. மஞ்சள் நிற ஒளி எங்கும் தோன்றுதல்

# தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை - 2013

வினாப்பத்திரம் - II | நேரம் :- 1 மணி 15 நிமிடம் | மொத்தப்புள்ளி :-

**1) பின்வரும் பந்தியை வாசிக்க.**

ஓரளவு வெப்பமுள்ள ஈரலிப்பான மலைப் பிரதேசங்களில் தேயிலை செழிப்பாக வளரும். இது பலநூறு ஏக்கர் நிலப்பரப்பில் நிரைநிரையாக வளர்க்கப்படும். இதனால் அப்பிரதேசம் பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் பசுமை நிறைந்து அழகாகக் காட்சி தரும்.

★ **கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. பந்தியில் விபரிக்கப்படும் செடி எது? ....................
2. இங்கு இடம்பெறும் உவமானம் யாது? ....................
3. **"உலர்ந்த"** என்பதன் எதிர்க்கருத்தை எழுதுக. ....................
4. **"குன்று"** என்பதன் ஒத்தகருத்தைக் குறிப்பிடுக. ....................
5. அளவான சூடு என்பதனைக் குறிக்கும் சொற்றொடரை எழுதுக. ....................
6. பந்தியிலுள்ள அடுக்குமொழிச் சொல் யாது? ....................

**2) முதலில் தரப்பட்டுள்ள சொல்லிற்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. வன்மை : ( கடினம் , மென்மை, வெம்மை, தண்மை )
2. அண்மை : ( சமீபம், தூரம், சேய்மை, அருகாமை )

**3) பழமொழியின் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக.**

கிட்டாதாயின் வெட்டென மற : ....................

**4) கீழ்க்காலும் சுழியும் அமைந்த சொல்லின் கீழ்க் கோடிடுக.**

( நுளம்பு, கோலம், சூழல், கானம் )

**5) சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. செய்நன்றி, செய்னன்றி, செய்ந்நன்றி, செய்ந்நன்ரி
2. அற்பணம், அர்ப்பணம், அர்ப்பனம், அற்ப்பணம்

**6) தனிச்சொல்லை எழுதுக.**

நூல் நூற்று ஆடை தயாரிப்பவன் : ....................

**7) அடைப்பினுள் தரப்பட்ட சொற்களை மட்டும் பயன்படுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்றை எழுதுக. ( நான்கு சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும் )**

| | | | |
|---|---|---|---|
| மரநிழலில் | இளைப்பாறினர் | விலங்குகள் | விவசாயிகள் |
| நாம் | களைப்புற்ற | உறங்கிய | அமர்ந்து |

....................

**8) மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.**

வாய் காட்டுதல் : ....................

**9) பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

நன்றி மறப்பது நன்றன்று என்பது வள்ளுவர் வாக்காகும்

**10) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தின் கருத்தையும் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**


1. நான் வீட்டிற்குப் போகலாமா? : ....................
2. நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்? : ....................

**11) பின்வரும் ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1) I am drinking water. : ..........................................

2) What are they? : ..........................................

**12) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1. 
: ..........................................

2. 
: ..........................................

**13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.**

1. உங்களுடைய புத்தகத்தைத் தர முடியுமா? : ..........................................

**14) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1. வே(G)கயென் அவிதின்ன : ..........................................

**★ 15 தொடக்கம் 44 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**15) இலங்கை நாட்டின் தேசியத்துடன் தொடர்புடைய தாவரம் எது?**

1. நாகமரம் 2. மாமரம் 3. நெல்லி மரம் 4. வேம்பு

**16) குறித்த காலத்தில் மட்டும் பூக்கும் தாவரம்**

1. தென்னை 2. வாழை 3. புளி 4. செவ்வரத்தை

**17) பின்வரும் வித்துக்கள் பரம்பலடையும் முறைகளை ஒழுங்கு முறையில் குறிப்பது**

1. 
2. 
3. 
4. 

1. நீர், காற்று, விலங்கு, வெடித்தல்
2. காற்று, விலங்கு, வெடித்தல், நீர்
3. காற்று, வெடித்தல், நீர், விலங்கு
4. காற்று, விலங்கு, நீர், வெடித்தல்

**18)** 
**உருவில் காணப்படும் பறவையின் பெயர்**

1. கருந்தலை மாங்குயில் 2. இரட்டைவாற் குருவி 3. கறுப்பு வெள்ளைக் குருவி 4. ஆட்காட்டி

**19) புத்தகங்களைச் சேதப்படுத்தாத பிராணி எது?**

1. இராமபாணம் 2. கறையான் 3. கரப்பான் 4. எலி


**20) எலியின் மூலம் பரப்பப்படும் நோய் எது?**

1. நீரிழிவு 2. மலேரியா 3. நீர் வெறுப்பு 4. பிளேக்

**21)** 
**அருகிலுள்ள உடுக்கோலத்தின் பெயர் யாது?**

1. பெருங்கரடி 2. கார்த்திகை 3. தென்சிலுவை 4. வேட்டைக்காரன்

**22) வசு வண்டித் தரிப்பிடத்தை உணர்த்தும் சைகை**

1. 
2. 
3. 
4 

**23) பின்வருவனவற்றுள் உடன்பாடான ( நேர் ) நடத்தை மாற்றத்தைக் குறிப்பது.**

1. காலையில் பல்துலக்காது தேநீர் அருந்துதல். 2. கண்ட இடத்தில் எச்சில் துப்புதல்
3. காலையில் நித்திரை விட்டு எழுந்தவுடன் படுக்கை அறையை ஒழுங்குபடுத்துதல். 4. பல்வேறு இடங்களிலும் கடதாசித் துண்டுகளை வீசுதல்.

**24) நான்கு மாணவர்கள் ஒரு வேளை உணவாக உட்கொண்ட உணவு பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது. இவற்றுள் எத்தொகுதி நிறையுணவாக அமையக் கூடியது.**

1. சோறு, கீரை, கிழங்கு, வாழைப்பழம் 2. இடியப்பம், பிட்டு, மரக்கறி, வாழைப்பழம்
3. சோறு, வல்லாரை, கிழங்கு, வாழைப்பழம் 4. இடியப்பம், இறைச்சி, மரக்கறி, வாழைப்பழம்



அழகு... உடல் நலம்... குழந்தை வளர்ப்பு... சாதனை மகளிர்... ஆலோசனை... உளவியல்...

சிநேகிதியே

# வியர்வை துர்நாற்றமா?

சிலர் எப்போதும் தமது புற அழகிற்கே அதிக முக்கியத்துவமளிக்கின்றனர். இவர்கள் நினைப்பது புற அழகை பேணினால் போதுமென்று. இது முற்றிலும் தவறான கருத்தாகும். எமது புற அழகென்பது நிச்சயமாக அக அழகிலேயே தங்கியிருக்கின்றது என்கின்றார் நம் அழகுக் கலை நிபுணரான தனு ரசாக்.

இவற்றில் மிகவும் முக்கியமான ஒன்றுதான் எமது உடலில் இருந்து வெளியேறும் வியர்வையும் அதிலிருந்து வெளியே வரும் துர்மணமுமாகும்.

உடல் துர்நாற்றம் ஏன் வருகிறது?

நம் உடலில் சுரக்கும் வியர்வையில் புரதம் உண்டு. அத்துடன் பக்டீரியா சேரும்போது அந்தப் புரதங்கள் உடைக்கப்பட்டு அமிலமாக மாறுகிறது. இவ் அமிலமே உடல் நாற்றத்துக்குக் காரணம்.

நமது உடலில் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. அதிக வெப்பநிலை காரணமாக எமது உடலை குளிர்மைப்படுத்துவதற்காக வெளியேறுவதுதான் இவ்வியர்வையாகும்.

ஆயினும் சிலர் இவ் வியர்வை மணத்தை பெரிதாக நினைப்பதில்லை. இவ் வியர்வையினால் வெளியே வரும் துர்நாற்றம் எம் அருகில் உள்ளவர்களுக்கு தர்மசங்கடங்களை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் சிறிதேனும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.



தனு ரசாக்

இவர்கள் அதிக சூடாகவோ, அதிகக் குளிர்ச்சியாகவோ இல்லாத வெதுவெதுப்பான தண்ணீரில், தினம் இரு வேளைகள் கட்டாயம் குளிக்க வேண்டும். ஒரு பக்கெட் தண்ணீரில் கொஞ்சம் வேப்பிலையைக் கசக்கி, தண்ணீரில் சிறிது நேரம் ஊற வைத்துக் குளிக்கலாம்.

தினம் இருமுறை டியோட்ரன்ட் உபயோகிக்கலாம். குளித்து முடித்ததும், உடலைத் துடைத்து விட்டு, வியர்க்க ஆரம்பிக்கும் முன்பே இதை உபயோகிக்க வேண்டும்.



சந்தைகளில் விற்கப்படும் தரம் வாய்ந்த டியோட்ரன்களை உபயோகிப்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.

எப்போதும் நாம் அதிகம் வியர்க்கும் வேலைகளை செய்வோமாயின் உடனே குளிக்காமல் சிறிதுநேரம் கழித்தே குளிப்பது சிறந்ததாகும். அத்தோடு, உடைகளை வைக்கும் அலுமாரிகளையும் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். ஒருமுறை உபயோகித்த உடையை, பிறகு துவைத்துக் கொள்ளலாம் என மற்ற துணிகளோடு சேர்த்து வைக்கக்கூடாது. ஏனெனில், அதிலுள்ள கிருமிகளும் துர்மணமும் மற்ற உடைகளுக்கும் பரவும்.

உணவுப்பழக்கம்கூட ஒருவரின் உடல் நாற்றத்துக்குக் காரணமாகலாம். வெட்டிவேரை குளிக்கும் தண்ணீரில் சிறிது நேரம் ஊற வைத்துக் குளித்தாலும் உடல் மணக்கும்.

அத்தோடு, அதிகமாக வியர்க்கக்கூடியவர்கள் தங்களது சருமத்திற்கேற்றவாறான காலநிலைக்கு ஏற்றவாறான பருத்தியினாலான ஆடைகளை அணிவதன் மூலமும் நாம் ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் இருக்கலாம்.

எஸ்.பிரியதர்ஷினி

## டிப்ஸ்கள்

* பாயாசம் செய்யும்போது திராட்சை போடுவதற்குப் பதிலாக பேரீச்சம்பழத்தை நறுக்கிப் போட்டால் வித்தியாசமாகவும், ருசியாகவும் சத்து நிறைந்ததாகவும் இருக்கும்.
* இட்லிக்கு அரைத்த மாவில் இரண்டு கரண்டி நல்லெண்ணெய் ஊற்றிக் கலந்து வைத்தால் இட்லி பஞ்சு போல் மிருதுவாக இருக்கும்.
* நெய் கெட்டியாக இருக்கும்போது பாத்திரத்தில் இருந்து எடுப்பது கடினம். தேக்கரண்டியைச் சூடாக்கிக் கொண்டு எடுத்தால் சுலபமாக வரும்.
* கெட்டியான ருசியான தயிர் வேண்டுமா? பாலை உறை ஊற்றி ஒரு தேக்கரண்டியால் கலக்கிவிட்டால் தயிர் கெட்டியாக இருக்கும்.
* வடித்த சாத கஞ்சியில் சீயக்காய்தூள் சேர்த்து தலையில் தேய்த்துக் குளிக்க, முடி பளபளப்பாகவும் உடல் குளிர்ச்சியாகவும் இருக்கும்.
* ஊறுகாயில் வறுத்த வெந்தயப்பொடியைச் சேர்த்தால் மணமாகவும் உடல் சூட்டையும் தணிக்கும்.

# கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் மன அழுத்தங்களை எதிர்கொள்ள 10 அறிவுரைகள்



**5 நிமிடம் அமைதியைப் பெறுங்கள்**

ஒரு குழந்தை பிறந்துவிட்டால் வீட்டில் பத்து பேர் இருந்தாலும் அத்தனை பேருக்கும் வேலை இருக்கும் என்று சொல்வார்கள். எனவே ஓய்வு எடுப்பதற்கு என்று நேரம் ஒதுக்கிக்கொள்ளுங்கள்.

**மசாஜ் செய்து கொள்ளுங்கள்**

மன அழுத்தத்திலிருந்து விடுபட மிகச் சிறந்த வழி மசாஜ் செய்து கொள்வதுதான்.

**எளிமையான உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள்**

மிகவும் எளிய உடற்பயிற்சிகள் மன அழுத்தம் மற்றும் உடல் வலிகளைக் குறைக்கும்.

**அக்குபஞ்சர் செய்து கொள்ளுங்கள்**

மன அழுத்தத்தின் அளவினைக் குறைக்கும் சக்தி அக்குபஞ்சருக்கு உண்டு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இந்த முறையில் இரத்த ஓட்டமானது சீராக இருந்து, ரிலாக்ஸாக இருப்பதை உணர வைக்கும் "எண்டார்ஃபின்" சுரப்பதைத் தூண்டும் சக்தி, அக்குபஞ்சருக்கு உண்டு.

**சுவாசப் பயிற்சி செய்யுங்கள்**

மன அழுத்தத்தைக் குறைப்பதில், தியானம் செய்வது மிகச் சிறந்த பலனை அளிக்கிறது. எனவே தினமும் 15 நிமிடங்களாவது தியானம் செய்து வந்தால், மனம் அமைதியாகி அதன் மூலம் உடல் சிரமங்களுக்கும் சிறப்பான இதம் கிடைக்கும்.

**பிரியமானவர்களுடன் மனம் விட்டுப் பேசுங்கள்**

கர்ப்பமான செய்தியை தெரிவித்தவுடன், மன நிலை எவ்வாறு இருக்கும் என்று அனைவரும் உங்களையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். இதனை குழந்தையை சுமந்து கொண்டிருக்கும் ஒன்பது மாதங்களும், உங்கள் நண்பர்கள், உற்றார், உறவினர், அக்கம்பக்கத்தினர் என்று அனைவரும் உங்கள் மீது அக்கறை எடுத்துக் கொண்டு, உங்கள் உடல்நலனை அடிக்கடி விசாரித்து தெரிந்து கொள்வதின் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

**வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்**

குழந்தை தொடர்பான வேலைகளைச் செய்வதற்கு, நீங்களாகவே ஆர்வமுடன் செய்யக்கூடிய வேலைகளைத் தவிர்த்து, பிறவற்றை உங்கள் உறவினர்களோ அல்லது நண்பர்களிடமோ ஒப்படையுங்கள். இதனால் நிம்மதியாக இருங்கள்.

**பகலில் சற்று நேரம் தூங்குங்கள்**

மன அழுத்தத்தைக் குறைக்கும் ஒரு கருவி தான் பகல் நேரத் தூக்கம். செய்ய வேண்டிய வேலைகளின் பட்டியலைப் பார்த்து விட்டு, செய்ய முடிந்ததை செய்து விட்டு, களைப்பை உணரும்போது ஒரு குட்டித்தூக்கம் போடுங்கள்.

**முடியாது என்று சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள்**

அலுவலகங்களில் அதிக அழுத்தம் தரக்கூடிய வேலைகளை மேலதிகாரிகள் உங்களிடம் ஒப்படைத்தால் தயக்கமின்றி உடனடியாக முடியாது என்று சொல்லிவிடுங்கள். ஏனெனில் சில அழுத்தங்களை உங்களால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் சிலவற்றை நீங்களே கட்டுப்படுத்தலாம்.

**கவலைகளை தவிர்த்துவிடுங்கள்**

இன்னும் சிறிது நாட்களில் மடியில் குழந்தை தவழப் போகிறது. குழந்தையின் முகத்தை முதன் முதலாகக் காணப்போகிறீர்கள். இப்போதுள்ள சின்னச் சின்னக் கவலைகளெல்லாம் அப்போது பெரிதாகத் தோன்றாது. ஆகவே, கவலைகளை மறந்துவிடுங்கள் அல்லது அலட்சியப்படுத்திவிடுங்கள்.




ஆ... ஹோய் ஹோய் ஹோய்
கலா ரசிகா ஹோய் கலா ரசிகா
ஹா... கலா ரசிகா ஹோய் கலா ரசிகா
மண்ணிலே விண்ணிலே
பெண்ணையே காணும்
கலா ரசிகா ஹோய் கலா ரசிகா
கண்ணிலே கண்டதை கையிலே அள்ளும்
கலா ரசிகா ஹோய் கலா ரசிகா

ஹோய் கலா ரசிகா ஹோய் கலா ரசிகா
ஆ... கலா ரசிகா
சாகசகாரா ஒரு கைகுட்டை
தந்து சேலையைத் திருடும் சதிகாரா
காசியில் வந்து சில பாவங்கள் செய்து
புண்ணியம் தேடும் பலிகாரா
பொய்யால் எவரும் வாழ்ந்ததும் இல்லை
மெய்யால் எவரும் வீழ்ந்ததும் இல்லை
காற்றினை பிடித்த கயிறுகள் திரிக்கும்
காசி கலா ரசிகா ஹோய் காதல் கலா ரசிகா
ஹோய்... காசி கலா ரசிகா...

பொல்லாத காசி கலா ரசிகா
வாராய் காதல் கலா ரசிகா
கண் பாராய் காதல் கலா ரசிகா...
கண் பாராய் காதல் கலா ரசிகா...
காசி கலா ரசிகா
ஹோய் ஹோய் காதல் கலா ரசிகா

மண்ணிலே விண்ணிலே
பெண்ணையே காணும்
கலா ரசிகா ஹோய் கலா ரசிகா
கண்ணிலே கண்டதை கையிலே அள்ளும்
கலா ரசிகா ஹோய் கலா ரசிகா

மங்கையின் மனதைத் திருடும் கண்ணன்
ஹேய்... மந்திரம் தந்திரம்
செய்வதில் மன்னன்
பெண்களின் கண்களில்
மண்களை தூவும் கலா ரசிகா
ஓ... உண்மை என்னிடம்
சொல் ஹேய் கலா ரசிகா

ஹா... கலா ரசிகா ஹோய் கலா ரசிகா
ஆசை கொண்ட மனமே
பெரும் கங்கையை உன்னிரு கைகளில்
அள்ளிட பார்கின்றாய்
வீசும் மின்னல் ஒளியை
உன் பைஜாமாவின் பைக்குள்
ஒலித்திட பார்கின்றாய்
வெற்றிகள் பெற்றவன் பூமிக்கு ராஜா
வெற்றிலை போட்டவன் காசிக்கு ராஜா
கண் ஜாடையால் பூட்டுகள் திறப்பாய்
காசி கலா ரசிகா ஹோய் காதல் கலா ரசிகா
காதல் கலா ரசிகா..

(பொல்லாத காசி கலா ரசிகா...)

(மண்ணிலே விண்ணிலே...)



## தனுஷ் தவிர்த்த படத்தில் சிம்பு!

பசங்க, மெரினா மற்றும் கேடி பில்லா கில்லாடி ரங்கா ஆகிய படங்களை இயக்கிய பாண்டிராஜ், அடுத்து தனுஷை வைத்து ஒரு கொமெடிப் படம் இயக்க ஆசைப்பட்டார். ஆனால், தற்போது ஆக்ஷன் கதைகளில் ஆர்வம் காட்டி வரும் தனுஷ் காமெடி கதையை கேட்டதுமே முகம் சுளித்து விட்டார். அதனால், இப்போது அந்தக் கதையை சிம்புவிடம் சொல்லி ஓ.கே. செய்த பாண்டிராஜ் அவரையே தயாரிப்பாளராக்கிவிட்டார். தனுஷ் தவிர்த்த படம் என்ற ஒரே காரணத்துக்காக இப்படத்தை பிரமாண்ட வெற்றி படமாகக் கொடுத்துவிட வேண்டும் என்று வரிந்து கட்டி நிற்கிறார் சிம்பு.



## இந்தியில் நல்ல கதைக்காக காத்திருக்கிறேன் - தனுஷ்

தென்னிந்திய நடிகரான தனுஷ் இந்தியில் நடித்த முதல் படமான 'ராஞ்சனா' மாபெரும் வெற்றி அடைந்துள்ளது. இதனையடுத்து அவருக்கு பட வாய்ப்புகள் குவிந்த வண்ணம் உள்ளன. ஆனால், முதல் வெற்றியை தக்கவைக்கும் நோக்குடன், நிதானமாக அடுத்தப் படத்தை தெரிவுசெய்து வருகிறாராம் தனுஷ்.

இதுகுறித்து அவர் கூறுகையில்; எனக்கு நிறைய படவாய்ப்புகள் வருகிறன. ஆனால், பொறுமையாக இருந்து, கதைகளை தெரிவுசெய்து வருகிறேன்.

'ராஞ்சனா' போன்று பொருத்தமான கதை அமைந்தால் உடனே களத்தில் இறங்கிவிடுவேன் என்று தெரிவித்துள்ளார். மேலும் 'ராஞ்சனா' இயக்குநர் ஆனந்த் எல் ராய், ராஞ்சனா எதிர்பார்த்ததை விட அதிகளவு வெற்றி பெற்றுள்ளதாகவும், எல்லாம் கடவுள் அருள் என்றும் தெரிவித்துள்ளார்.

# தமிழ் சினிமாவில் வரிசை கட்டும் பார் பாடல்கள்

தமிழ் சினிமாவில் ''பார்'' பாடல்களோடு சமீபத்தில் அதிகப் படங்கள் வெளியாகி வருகிறது. சினிமா பாடல்களில் காதல் சோகத்தை வெளிக்காட்ட மது குடித்து ஹீரோக்கள் பாடுவது போல காட்சிகள் வருவது வழக்கம். சமீபத்தில் வெளியான பெரும்பாலான படங்களில் மதுக்கடை காட்சிகளும் பாடல்களும் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாக உள்ளது. பார் பாடல் இடம்பெற்றால் படம் ஹிட்டாகும் என்று கூறப்படுவதால் இப்படியான பாடல்கள் அதிகரித்து வருவதாக கோடம்பாக்கத்தில் கூறுகின்றனர்.
சிவா மனசுல சக்தி படத்தில் இடம்பெற்ற ''எம்.ஜி.ஆரு இல்லீங்க, நம்பியாரு இல்லீங்க'' பாடல் பாரில் பாடுவதுபோல படமாக்கப்பட்டது. ஒரு கல் ஒரு கண்ணாடி படத்தில் இடம்பெற்ற ''வேணாம் மச்சான் வேணாம்'' பாடல் ஹிட்டானது. முகமூடி படத்தில் ''நாட்டுல, நம்ம வீட்டுல நாம பாட்டிலுக்குள் மாட்டிக்கிட்டோம் மாப்ளே'' என்ற பாடல் இரசிக்கப்பட்டது.
அடுத்து மதுபானக்கடை என்ற பெயரிலே ஒரு படம் வந்து அதுபற்றி பாடிப்போனது. சகுனி படத்தில் 'போட்டது பத்தல' என்ற பார் பாடல் ஹிட்டானது. 3 படத்தில் 'கொலவெறி', கலகலப்பு படத்தில் இடம்பெற்ற 'இவளுக இம்சை தாங்க முடியல', கேடி பில்லா கில்லாடி ரங்கா படத்தில் 'ஒரு பொறம்போக்கு முதன்முதலா சரக்கடிக்க கத்து தந்தான்', நான் படத்தில் 'மாக்காயேலா மாக்காயேலா', ஒஸ்தி படத்தில் 'கலாசலா கலாசலா கலாசலா கலாசலா', உதயம் என்.எச்.4 படத்தில் 'ஓரக்கண்ணாலே என்னை ஓரங்கட்டுறா', எதிர்நீச்சல் படத்தில் 'சத்தியமா நீ எனக்கு தேவையே இல்லை', துப்பாக்கி படத்தில் 'கூகுள் கூகுள் பண்ணிப்பார்த்தேன்' என்பது உட்பட பார் பாடல்களின் ஆதிக்கம் தமிழ் சினிமாவில் அதிகரித்துள்ளன.
விரைவில் ரிலீஸ் ஆக இருக்கும் பல படங்களில் பார் பாடல்கள் தங்கள் இடங்களை கெட்டியாகப் பிடித்துள்ளன. டிஸ்கோ பாடல்கள் கானா பாடல்கள் ஒரு காலத்தில் அதிகம் வந்தது போல இதுவும் ஒரு டிரெண்ட். குத்துப்பாடல்கள்தான் இப்போது பார் பாடல்களாக மாறியிருக்கின்றன. அடுத்த டிரெண்ட் வரும் வரை இது மாதிரியான பாடல் காட்சிகளைத் தவிர்க்க முடியாதுதான் என்றார் முன்னணி இயக்குநர் ஒருவர்.







# விலங்குகள் நல விளம்பர தூதுவரான த்ரிஷா!

தற்போது சினிமா வாய்ப்புகள் குறைந்து விட்டதால் தெரு நாய்களை பராமரிப்பதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார் த்ரிஷா. இப்போது விலங்குகள் நல வாரியத்தில் தூதுவராக இருக்கும் த்ரிஷா இந்த இயக்கத்தை விரைவில் சென்னை நகரம் முழுக்க விரிவுபடுத்தி அனாதைகளாகத் திரியும் நாய்களுக்கு அடைக்கலம் கொடுக்கப் போவதாக கூறுகிறார். அத்தோடு, நாய் வளர்ப்பதில் ஆர்வமுள்ளவர்களுக்கு அவற்றை தத்தெடுத்து வளர்க்க போதிய உரிமங்கள் அளிக்கப் போவதாகவும் கூறுகிறார்.



# விஜய்யின் வில்லேஜ் கெட்டப்!

நண்பன் மற்றும் துப்பாக்கி, தலைவா என தொடர்ந்து சிட்டி சப்ஜெக்டுகளில் நடித்த விஜய் தற்போது நடித்து வரும் ஜில்லா படத்தில் பக்கா மதுரை கிராமத்து இளைஞனாக நடிக்கிறார். அதனால் மதுரை தமிழ் பேசி நடிக்கும் விஜய் அங்குள்ள இளைஞர்களைப் போன்று வேட்டி கட்டி விறைப்பாக நடப்பது, சண்டை காட்சிகளில் அரிவாள் சுழற்றுவது என்று பக்காவாக தன் கெட்டப்பை மாற்றி நடித்து வருகிறார்.



மா

# நடித்துகொண்டே படிப்பை தொடரும் நஸ்ரியா

நேரம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் நஸ்ரியா. தன்னுடைய நடிப்பாலும், அழகாலும் எளிதாக ரசிகர்களின் மனதில் இடம்பிடித்து விட்டார்.

அத்துடன் படவாய்ப்புகளும் குவிந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் நடிப்புடன் சேர்த்து தனது கல்லூரி படிப்பையும் தொடர உள்ளாராம் நஸ்ரியா. இதுகுறித்து அவர் கூறுகையில்; சிறுவயதிலேயே நடிக்க வந்து விட்டதால், படித்துக்கொண்டே நடிக்கவும் செய்தேன். பிளஸ் 2 படித்த போது, ஒரு மலையாளப் படத்தில் கதாநாயகி வாய்ப்பு கிடைத்தது. தற்போது பல படங்களில் நடிப்பதால், ரொம்பவே பிஸியாகிவிட்டேன். நடிப்பைப் போன்றே, படிப்பிலும் மிகுந்த ஆர்வம் உள்ளதால் தற்போது பி.காம் படித்து வருகிறேன்.

முடிந்தவரை படிப்பு பாதிக்காத வகையில் படங்களுக்கு கால்ஷீட் கொடுக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.



னம்

ணி!

தன் முதல் படமான ஒரு கல் ஒரு கண்ணாடி படத்தில் சந்தானத்துடன் இணைந்து நடித்தார் உதயநிதி. அப்படம் ஹிட்டாகவே இப்போது 'இது கதிர்வேலின் காதல்' படத்திலும் இணைந்துள்ளனர். இந்நிலையில் அடுத்து உதயநிதி நடிக்கவிருக்கும் நண்பேண்டா என்ற படத்திலும் சந்தானம் இணைகிறார். முந்தைய இரண்டு படங்களையும் விட இப்படத்தில் சந்தானத்துக்கு வெயிட்டான ரோல் மற்றும் பாடலும் கொடுத்துள்ளனர்.



# மலையாளத்தில் கால் பதிக்கும் வேதிகா

பரதேசி புகழ் வேதிகா தற்போது மலையாளத்தில் நடிப்பதற்கு தீவிரம் காட்டியுள்ளார்.

மதராசி படம் மூலம் நடிகையாக அறிமுகமான வேதிகா முதன் முதலில் சூர்யாவுடன் ஒரு பிஸ்கட் விளம்பரத்தில் நடித்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழில் சில படங்களில் நடித்த இவர் தெலுங்கு, கன்னடப் படங்களில் நடித்திருந்தாலும் சொல்லிக்கொள்ளும்படி எந்த கதாபாத்திரமும் அமையவில்லை.

பாலாவின் இயக்கத்தில் நடித்த பரதேசி நல்ல பெயரை வாங்கித் தந்ததைத் தொடர்ந்து வசந்தபாலன் இயக்கத்தில் சித்தார்த் ஜோடியாக காவியத்தலைவன் படத்தில் நடித்து வருகிறார். தென்னிந்திய மொழிகளில் மலையாளத்தை மட்டும் விட்டுவைத்திருந்த வேதிகா தற்போது அங்கும் கால் பதிக்கிறார். ஜோஸ் தாமஸ் இயக்கும் ஸ்ரீங்கார வேலன் படத்தில் திலீப்புக்கு ஜோடியாக நடிக்கிறார்.

# பாடல்



படம்: காதல் மன்னன்
இசை: பரத்வாஜ்
பாடியவர்: SP பாலசுப்ரமணியம்
பாடல்வரிகள்: வைரமுத்து

உன்னைப் பார்த்த பின்பு நான்
நானாக இல்லையே
என் நினைவு தெரிந்து நான்
இதுபோல இல்லையே
எவளோ எவளோ என்று
நெடுநாள் இருந்தேன்
இரவும் பகலும் சிந்தித்தேன்...
இவளே, இவளே, என்று
இதயம் தெளிந்தேன்
இளமை இளமை பாதித்தேன்...
கொள்ளை கொண்ட அந்த நிலா
என்னைக் கொன்று கொன்று தின்றதே
இன்பமான அந்த வலி
இன்னும் வேண்டும்
வேண்டும் என்றதே...

(உன்னை...)

ஏன் பிறந்தேன் என்று
நான் இருந்தேன்
உன்னைப் பார்த்தவுடன் உண்மை
நான் அறிந்தேன்
என் உயிரில் நீ பாதி என்று
உன் கண்மணியில் நான்
கண்டு கொண்டேன்
எத்தனை பெண்களைக்
கடந்திருப்பேன் இப்படி
என் மனம் துடித்ததில்லை
இமைகள் இரண்டையும்
திருடிக்கொண்டு
உறங்கச் சொல்வதில் நியாயமில்லை
நீ வருவாயா? இல்லை மறைவாயோ?
ஏ ஏ ஏ ஏ ஏ!
தன்னைத் தருவாயோ? இல்லை
கரைவாயோ...?

(உன்னை...)

நீ நெருப்பு என்று தெரிந்த பின்னும்
உன்னைத் தொடத் துணிந்தேன்
என்ன துணிச்சலடி
மணமகளாய் உன்னைப்
பார்த்த பின்னும்
உன்னைச் சிறையெடுக்க
மனம் துடிக்குதடி
மரபு வேலிக்குள் நீ இருக்க
மறக்க நினைக்கிறேன் முடியவில்லை
இமயமலை என்று தெரிந்த பின்னும்
எறும்பின் ஆசையோ அடங்கவில்லை
நீ வருவாயோ? இல்லை
மறைவாயோ? ஏ ஏ ஏ ஏ ஏ!
தன்னைத் தருவாயோ? இல்லை
கரைவாயோ...?

(உன்னை...)





சிறுவர் பகுதி

# துரோகியே!



ஒரு காட்டில் வசித்த கழுகும், ஆந்தையும் நண்பர்களாக இருந்தன. இவையிரண்டும் ஊர் கதைகளை எல்லாம் பேசின.

ஒருநாள் ஆந்தை கழுகிடம், "கழுகாரே! என்னுடைய குழந்தைகளை நீ பார்த்திருக்கிறாயா? அவை மிகவும் அழகாக இருக்கும். அவற்றின் கண்களையும், இறக்கைகளையும் பார்க்கப் பார்க்க மிகவும் அழகாக இருக்கும். நான் சொன்ன அடையாளங்களை வைத்தே என் குழந்தைகளை நீ அடையாளம் கண்டுகொள்ள முடியும்!" என்று சொன்னது.

அதைக்கேட்ட கழுகும், "அப்படியா?" என்று வியந்தது. பிறகு இரண்டும் தனது இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றன.

ஒருநாள் கழுகு இரைதேடிச் சென்றபோது, மரப்பொந்து ஒன்றில் சில ஆந்தைக் குஞ்சுகளைப் பார்த்தது. பெரிய கண்களுடன் பயங்கரமாக விழித்தபடி இருந்த அந்த குஞ்சுகளைப் பார்த்த கழுகு, "இவை நிச்சயமாக எனது நண்பனின் குழந்தைகளாக இருக்க முடியாது!" என்று நினைத்துவிட்டு அக்குஞ்சுகளைப் பிடித்துத் தின்றது.

அந்த நேரத்தில் கழுகின் நண்பனான ஆந்தை அங்கு வந்து சேர்ந்தது. அது நடந்தவற்றைப் பார்த்து, "துரோகியே! என் குழந்தைகளை இப்படிப் பிடித்து தின்றுவிட்டாயே! ஒரு நல்ல நண்பனின் செயல் இதுதானா?" என்று வருந்தியபடி கேட்டது.

உடனே கழுகு ஆந்தையிடம், "நண்பனே! உன் குழந்தைகள் மிகவும் அழகாக இருக்கும் என்றல்லவா என்னிடம் கூறினாய். இந்த அவலட்சணமான குஞ்சுகள் உன்னுடையதாக இருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை. நீ சொன்ன வீணான பொய்யால்தான் இப்படியெல்லாம் நிகழ்ந்துவிட்டது!" என்று திருப்பிச் சொன்னது.

"உண்மையை மறைத்து மிகைப்படுத்திச் சொன்ன பொய்யால் குஞ்சுகளை இழந்துவிட்டோம்," என்று ஆந்தையும் உணர்ந்தது. இதுக் குத்தான் உள்ளதை உள்ளபடி சொல்ல வேண்டும். என்பது.

# சகதித் திருவிழா



சிறுபிள்ளைப் பருவம் சேறோடு சிநேகிதம் கொண்ட பருவம்.

மழைநீர் குட்டையாக தேங்கி நின்றால் அதில் குதித்தும், நண்பன் மீது வாரி இறைத்தும் மகிழும் விளையாட்டுப் பருவம்.

கள்ளம் கபடம் இல்லாமல் மகிழ்ச்சியாக செய்யும் இதுபோன்ற சேட்டைகள், சிறுவர்களுக்கு உற்சாகத்தையும், தைரியத்தையும் ஊட்டக் கூடியதாம்.


இதை ஊக்கப்படுத்தும் விதமாக அமெரிக்காவில் 26 ஆண்டுகளாக சகதி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 9 ஆம் நாள், அமெரிக்காவில் சிறியவர், பெரியவர் என்ற பேதமில்லாமல் சேற்றில் இறங்கி விளையாடி மகிழ்வார்கள்.

விதவிதமான போட்டிகளும் சேற்றுக் களத்தில் நடைபெறும். இழுவை வண்டியில் பாரம் வைத்து சகதியில் குறிப்பிட்ட தூரத்தை 2 மணி நேரத்தில் கடப்பவர்களுக்கு "கிங் ஒப் மட்" மற்றும் "குயின் ஒப் மட்" விருதுகள் வழங்கப்படும்.

இந்த ஆண்டும், அமெரிக்காவில் சகதி திருவிழா அமோகமாக கொண்டாடப்பட்டது. டெட்ராய்டு மாகாணத்தில் 150 மீற்றர் சகதி மைதானத்தில் 2 ஆயிரம் சிறுவர்கள், சேட்டை செய்து விளையாடியது அவர்களது பெற்றோர்களை நெகிழச் செய்தது!

# உயரமான ஊஞ்சல்



உலகிலேயே உயரமான ஊஞ்சல் சீனாவின் ஹார்பின் நகரில் அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள 1100 அடி உயர டி.வி. கோபுரத்தில் அது அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கோபுரத்தில் உள்ள 700 அடி உயர பார்வையாளர்கள் மாடத்தில் அந்த ஊஞ்சல் அமைந்திருக்கின்றது.

அதில் அமர்ந்தபடி நகரைப் பார்த்து ரசிக்கலாம். இந்த ஊஞ்சலில் ஆடுவது, துணிச்சல் மிக்கவர்களின் விளையாட்டு எனப்படுகிறது. இந்த டி.வி. கோபுரம் உலகின் 2 ஆவது உயரமான கோபுரம் ஆகும். உக்ரைன் நாட்டின் கீவ் நகரில் உள்ள டி.வி. கோபுரம்தான் உலகிலேயே மிக உயரமானது ஆகும்.

# குதிரையின் நிழல்

அரேபிய குதிரை வணிகன் ஒருவன் மாசிடோனிய மன்னர் பிலிப் என்பவரிடம் தனது குதிரையை விற்பதற்காகக் கொண்டு வந்தான். தளபதிகளிடம், "உங்களில் யாராவது ஒருவர் இந்தக் குதிரையை அடக்க முடியுமா?" என்று கேட்டார் மன்னர்.

எவருக்கும் அடங்காமல் தறிகெட்டு ஓடியது அந்தக் குதிரை. எல்லோருக்கும் அதன் அருகில் நெருங்குவதற்குக்கூட அச்சமாக இருந்தது.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மன்னரின் மகன், தனது தந்தையை நோக்கி, "நீங்கள் அனுமதித்தால் இந்தக் குதிரையை நான் அடக்கிக் காட்டுகிறேன்" என்றான்.

மன்னரும் அனுமதியளிக்க, சிறிது நேரத்தில் அந்தக் குதிரை அவனிடம் அடங்கிப் போனது.

குதிரை அதனுடைய நிழலைப் பார்த்து, மிரண்டு ஓடியதை அந்த இளவரசன் கவனித்துவிட்டான். அதனால் சூரியன் இருக்கும் திசையை நோக்கி, குதிரையை அவன் செலுத்தியதால், பின்னால் விழும் நிழல் குதிரைக்குத் தெரியவில்லை. அதனாலேயே குதிரை கட்டுக்குள் அடங்கியது.

அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்த அந்த இளவரசன்தான் மாவீரன் அலெக்சாண்டர்.

**25) ஒரு மாணவன் தனது தாய் நாட்டுக்காக ஆற்ற வேண்டிய கடமை அல்லாதது.**

1. பயணம் செய்யும் இடங்களில் பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
2. தேசியக் கொடிக்கும் தேசிய கீதத்திற்கும் கௌரவமளித்தல்.
3. நாட்டுக்காக உழைத்த தலைவர்களை அலட்சியப்படுத்தல்
4. இலவசமாகக் கிடைக்கும் பாடநூலை அடுத்த வருட மாணவனும் பயன்படுத்தும் வகையில் பாதுகாத்தல்.

**26) முளைப்பதற்கு அதிக நாள்கள் தேவைப்படும் வித்து**

1. பாகல் 2. பூசணி 3. நெல் 4. தேங்காய்

**27) மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்ப்பதற்கான உழைப்பு, மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருத்துவசாலை நிறுவியமை, நவலங்கா சமய பாடசாலை ஆரம்பித்தமை ஆகிய கூற்றுக்களுடன் தொடர்புடையவர்.**

1. 
2. 
3. 
4. 

**28) மின்னேரியாக் குளம் அமைந்துள்ள மாவட்டம்**

1. அநுராதபுரம் 2. பொலன்னறுவை 3. அம்பாறை 4. திருகோணமலை

**29)** "கிழாறோலை மேலாறோலை
எண்ணிப் பார்த்தால் பதினாறோலை
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு"


**இப்பாடல் எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?**

1. கோலாட்டம் 2. ஊஞ்சற் பாட்டு
3. கிட்டியடித்தல் 4. கொம்பு விளையாட்டு

**30)** 

**இங்கு காட்டப்படும் தக்காளிப் பழத்தை அலங்காரஞ் செய்வதற்கு மிகப் பொருத்தமான தையல் வகைகள்.**

1. நரம்புத் தையல், கம்பளித் தையல், சங்கிலித் தையல் 2. சிறுநூலோடி, கம்பளித் தையல், சங்கிலித் தையல்
3. நரம்புத் தையல், சிறுநூலோடி, கம்பளித் தையல் 4. பெருநூலோடி, சோம், சங்கிலித் தையல்

**31)** 

**இக்குறியீடு உணர்த்துவது**

1. இவ்வழியே செல்ல முடியும் 2. இப் பக்கம் மேலே
3. மேலே செல்லத் தடை 4. இருவழிப் பாதை

**32) சந்திர வட்டக்கல்லில் செதுக்கப்பட்டுள்ள அடையாளங்களுள் இடம் பெறாதது.**

1. மிருகங்கள் 2. அன்னப்பட்சி 3. தாமரையிதழ் 4. நெற்கதிர்

**33) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்**

1. 110 2. 1919 3. 2919 4. 1929

**34) தேசிய அடையாள அட்டை வழங்குகின்ற திணைக்களம்**

1. தபாலகம் 2. ஆட்பதிவுத் திணைக்களம் 3. கிராம சேவை அலுவலகம் 4. அரசாங்க அதிபர் பணிமனை

**35) அரச இலச்சினையில் சூரிய சந்திரர் குறிப்பது**

1. சௌபாக்கியம் 2. நிலைத்திருத்தல் 3. தன்னிறைவு 4. ஒளிமயமான தன்மை

**36) ஒவ்வொருவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டிய பழக்க வழக்கங்களில் ஒன்று**

1. உண்மை பேசுதல் 2. மன்னிக்கும் மனோபாவம் 3. பொறாமைப்படுதல் 4. நல்லவே எண்ணல்

**37) புதுமணத் தம்பதியினர் முன்னே நீர் நிரம்பிய பாத்திரத்தில் வெள்ளைநிறப் பூக்கள் இட்டு எடுத்துச் செல்லும் வழக்கத்தை உடைய இனத்தவர் யார்?**

1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லிம் 4. வேடுவர்

**38) துறப்பணத்தின் மூலம் செய்யப்படும் வேலை**

1. வெட்டுதல் 2. துளையிடுதல் 3. செதுக்குதல் 4. இறுக்குதல்

**39) மழைவரப் போவதை முன்கூட்டியே தெரியப்படுத்தும் செயற்பாடு**

1. நரி ஊளையிடுதல் 2. கீழ்வானம் சிவத்தல் 3. சேவல் கூவுதல் 4. எறும்புகள் முட்டை கொண்டு திட்டை ஏறுதல்

**40)** 

காந்தம்

**கட்டித் தொங்க விடப்பட்ட பொருளுக்கு அண்மையில் காந்தத்தை கொண்டு சென்றபோது A நிற்கும் நிலையை உரு காட்டுகிறது எனின் "A" என்ற பொருள் யாதாக இருக்கலாம் ?**

1. காந்தம் 2. இரும்பு 3. மரத்துண்டு 4. அழிறப்பர்

**41) பின்வருவனவற்றுள் புல் வகையைச் சேர்ந்த தாவரம்.**

1. கத்தாப்பு 2. கோரை 3. றோசா 4. மகோகனி

**42) தரமான பண்டமொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரம்.**

1. பண்டத்தின் விலை 2. பயன்படுத்தப்படுவதற்கான அறிவுறுத்தல் 3. ISO இலச்சினை பொறிக்கப்பட்டிருத்தல் 4. பண்டத்தின் நிறை

**43) இலங்கையில் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி**

1. துன்கிந்த 2. தியலும 3. அபடீன் 4. பம்பரகந்த

**44) தேசப்படமொன்றில் "A" தர வீதியைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தப்படும் நியம நிறம்**

1. சிவப்பு 2. கறுப்பு 3. மஞ்சள் 4. நீலம்

**★ கீழ்க் காணும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.**

**45) எண்கோலத்தில் அடுத்து வரும் எண்களை முறையே எழுதுக.**


2420, 2412, 2404, ......................... , .............................

**46) உருவில் 0.5 பகுதியை நிறந் தீட்டிக் காட்டுக.** 

**47) வாய்க்கால் ஒன்றை வெட்டி முடிக்க 4 மணித்தியாலம் தேவைப்படுகிறது. ஒருவர் மு.ப 9.00 மணிக்கு வேலையை ஆரம்பித்தால் எத்தனை மணிக்கு நிறைவு செய்வார்?**

..................................................................................................................................

**48) ஒவ்வொன்றும் 15kg நிறையுள்ள இரண்டு அரிசிப் பொதிகளில் இருந்து 7kg வீதம் விற்பனை செய்யப்பட்ட பின்னர் இரண்டு பொதிகளிலும் எஞ்சியுள்ள அரிசியின் மொத்த நிறை யாது?** ..................................................................


**49)**  **அருகில் உள்ள தொட்டி ஒன்றில் இருந்து ஒரு மணித்தியாலத்தில் 30 லீற்றர் நீர் வெளியேறுகின்றது. தொட்டியில் இருந்து நீர் முழுவதும் வெளியேற 4.30 மணித்தியாலம் தேவைப்பட்டது எனின் தொட்டியில் ஆரம்பத்தில் இருந்த நீரின் அளவு யாது?**

..................................................................................................................................

**50) 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி பிறந்த ஒருவரிற்கு 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி அவரது வயது யாது?** ..........................


**51) 36 cm நீளமான கம்பித்துண்டொன்று மூன்று சம பகுதிகளாக வெட்டப்பட்டது. பின்பு அவற்றுள் ஒரு துண்டு மேலும் இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டதெனின் சிறிய துண்டொன்றின் நீளம் யாது?** ..............................................................................

**★ ஆரம்பப் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 115 ஆகும்.**




**52) தரம் நான்கில் கல்வி பயிலும் மாணவர் தொகையை வரைபில் குறித்துக் காட்டுக?**

**53) மாணவர் ஒருவருக்கு 2 பேனாக்கள் வீதம் தரம் 02 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கத் தேவையான பேனாக்கள் எத்தனை?** ..........................................

**54)** 


**இவ்வுருவின் சுற்றளவு யாது?** ..........................................


| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| அரிசி | 8 Kg | ரூபா. 480.00 |
| தீப்பெட்டி | 5 | ரூபா. 15.00 |
| தே.எண்ணெய் | 200ml | ரூபா. 60.00 |

**★ விலைப்பட்டியலை அவதானித்து விடை எழுதுக.**

**55) ஒரு கிலோக்கிராம் அரிசியினதும் 1 தீப்பெட்டியினதும் மொத்த விலை யாது?** ..............................

**56) 1 $\ell$ தேங்காய் எண்ணெயை வாங்கிக் கொண்டு ரூபா 500.00 தாள் ஒன்றினைக் கடைக்காரனுக்குக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் யாது?** .............

**57)**  **இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?** ..........................................




**58) மாணவனுக்கு மேற்குத் திசையில் உள்ளது யாது?** ..........................................

**59) புகையிரதம் படகிற்கு எத்திசையில் உள்ளது?** ..................................................

**60) பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் ( ✔ )அடையாளத்தையும் பிழையாயின் (X) அடையாளத்தையும் எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது இடுக.**

1. ஓராடு இரண்டு குட்டிகளை ஈன்றது. ( ................. )
2. அந்த மரங்கள் பார்வைக்குச் சிறியதாய் இருக்கும். ( ................. )

**61) வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.**

1. **"செல்வம் என்பது சிந்தையின் நிறைவே"** எனும் கதைப் பாடல் ...................................................... புலவர் அவர்களால் இயற்றப்பட்டது.
2. உணவுப் பொருள்கள் பழுதடைவதற்கு நுண்ணுயிர்களே காரணம் எனக் ................................................................ கண்டு பிடித்தார்.

**62) " வீட்டுத் தோட்டம் அமைத்தல் ஆரோக்கிய வாழ்வுக்கு சாலச் சிறந்தது" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களாவது இருத்தலோடு எழுவாய், பயனிலைத் தொடர்பு இயைபுடையனவாக இருத்தல் வேண்டும்.)**


1. ..............................................................................................................................

2. ..............................................................................................................................

3. ..............................................................................................................................

Colour: Cyan Magenta Yellow Black

★ 21 ஆம் 22 ஆம் வினாக்களின் பிரசினங்களை விளங்கிக் கொண்டு தரப்பட்டுள்ள உருவின் பெறுமானத்தைக் காண்க.




21) உரு  இன் பெறுமானம் யாது? 1) 5 2) 1 3) 6




22) உரு  இன் பெறுமானம் யாது? 1) 6 2) 8 3) 9

★ கீழ்க் காணும் வாக்கியம் கருத்துள்ளதாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

23) அணில் வண்ண மலரைக் கொறித்துத் தின்றது.

1. அணில் என்பதற்குப் பதிலாக “கிளி” என்பதை இடுதல்
2. கொறித்து என்பதற்குப் பதிலாக “கடித்து” என்பதை இடுதல்
3. மலரை என்பதற்குப் பதிலாக “மாம்பழத்தை” என்பதை இடுதல்




24. பிழையான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1. நுளம்பு ஒரு பிராணி; இது நோயைப் பரப்புகின்றது.
2. உருளைக் கிழங்கு ஒரு கொடி; இது இங்கு பயிரிடப்படுவதில்லை.
3. ஆடு ஒரு தாவரவுண்ணி; அது பாலைத் தருகின்றது.

25. உருவில் காட்டியவாறு கடதாசித் துண்டொன்றை நான்காக மடித்து “ S ” எனும் எழுத்து வெட்டி எடுக்கப்பட்டது.

மேற்படி கடதாசித் துண்டை விரித்துப் பார்க்கும்போது காணக்கூடிய உருவைத் தெரிவு செய்க.




1. 
2. 
3. 

26. ஞாயிற்றுக் கிழமையில் ஆரம்பமாகும் ( 31 நாள்களைக் கொண்ட ) மாதமொன்றில் முதலாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளும் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளும் விடுமுறை நாட்களாக இருப்பின் குறிப்பிட்ட மாதத்தில் இருக்கக்கூடிய வேலை நாட்கள் எத்தனை?

1. 23 2. 24 3. 25


27. தரப்பட்ட தகவல்களைக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.



| 1 கொப்பி + 2 அழிப்பான் | 2 அழிப்பான் + 3 பென்சில்கள் | 1 கொப்பி + 3 பென்சில்கள் |
|---|---|---|
| ரூபா 30.00 | ரூபா 28.00 | ரூபா 38.00 |

4 அழிப்பான் 6 பென்சில்களின் விலை யாது?


1. ரூபா 60.00 2. ரூபா 58.00 3. ரூபா 56.00

28. முதலில் தரப்பட்டுள்ள இரு உருக்களையும் இணைக்கும்போது பெறப்படும் மிகச் சரியான உருவைத் தெரிவு செய்க.



1. 
2. 
3. 

★ இலக்கமிடப்பட்ட அம்புக் குறிக்கு நேரே X,Y எனும் இரு சில்லுகள் அம்புக்குறி இடப்பட்ட திசை வழியே ஒரே வேகத்தில் சுழல விடும்போது ஓய்வுக்கு வரும் எழுத்துக்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதன்படி 29ஆம் 30 ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.




| தடவைகள் | X | Y |
|---|---|---|
| 1 | A | B |
| 2 | .......... | A |
| 3 | C | .......... |
| 4 | ........... | .......... |

29. X சில்லு 2ஆம் தடவையும் Y சில்லு 3ஆம் தடவையும் ஓய்வுக்கு வரும்போது அம்புக்குறிக்கு நேரேயுள்ள எழுத்துக்கள் முறையே.


1. F , H 2. F , F 3. F , G


30. இருசில்லுகளும் தரப்பட்ட ஒழுங்கில் ஓய்வுக்கு வரும்போது நான்காவது தடவையில் அம்புக்குறிக்கு நேரேவரும் எழுத்துக்கள் முறையே


1. H, F 2. G , E 3. B , C


★ 31 ஆம் 32 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் விரிப்புக் காட்டப்பட்டுள்ளது. இவற்றை மடித்துச் சதுரமுகி ஆக்கும்போது அமையக் கூடிய உருவைத் தெரிவு செய்க.

31)





1. 


2. 


3. 

32)



1. 

2. 

3. 

★ 33ஆம் 34ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட கூற்றுக்களுடன் பொருந்தும் உருவினை இனங்கண்டு அதன் கீழ்க் கீறிடுக.

33) ★ தர்ஷா தலை மயிரைக் கட்டையாக வெட்டியிருப்பாள்.

★ சிரித்த முகத்துடன் இருப்பாள்

★ தோடு அணிய மாட்டாள்.

1. 

2. 

3. 


34) இது கணனி மனிதனைப் பற்றியது


★ கண்கள் வட்ட வடிவுடையன


★ வாய் செவ்வக வடிவமுடையது

★ செவிகள் சதுர வடிவமுடையன

★ மூக்கு முக்கோண வடிவமுடையது

1. 

2. 


3. 

★ 35ஆம் 36ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட தொடர்பிற்கேற்ப இரண்டாவது சொற்கூட்டத்திற்கான விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

35) அரி, துப்பல், கரம் → அப்பம் எனின் கலா, அன்னம், முரல் → ............................

36) கோலம், பட்டு, பண்டம் → கோட்டம் எனின் மரம், கன்னி, புறம் → ............................

37) அருகிலுள்ள உருவில் R இல் இருந்து அம்புக்குறி காட்டப்பட்ட திசைவழியே S க்குச் செல்ல எத்தனை வழிகள் உள்ளன?





( .................................. )

38) தபாற்கந்தோர் வைத்தியசாலைக்கு ஒருகிலோமீற்றர் தெற்கேயும் கோவில், வைத்தியசாலைக்கு ஒரு கிலோமீற்றர் வடக்கேயும் வைத்தியசாலை, வங்கிக்கு அரைக் கிலோமீற்றர் கிழக்கேயும் சந்தை, வைத்தியசாலைக்கு அரைக்கிலோமீற்றர் கிழக்கேயும் அமைந்துள்ளன. ஒருவர் கோவிலிலிருந்து வைத்தியசாலையூடாக வங்கிக்குச் சென்று மீண்டும் அதே வழியில் கோவிலுக்குச் செல்வாராயின் அவர் சென்ற தூரம் யாது?

( .................................. )

★ மூவர் பயிற்சிக்காக நடந்து சென்ற பாதைகள் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளன.




39. இவர்களில் மிகவும் கூடிய தூரம் நடந்தவர் யார்?

[ ...................................................................... ]

40. சசி நடந்த போது எத்தனை முறை இடது பக்கம் திரும்பினான் ?

[ ...................................................................... ]

# என்னாச்சி...!



## தர்மசங்கடமான நிலை வேண்டாமே

கடந்த வாரம் நான் அலுவலகத்திற்கு வருவதற்காக பஸ்ஸில் உட்கார்ந்திருந்தபோது, அடுத்த பஸ் நிலையத்தில் ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் ஏறினார். அப்போது ஒரு பிரேக் அடித்தது. அந்த பெண் தட்டுத்தடுமாறிப்போனாள். உடனே நான் அவருடைய கையைப் பிடித்து என்னுடைய பக்கத்தில் உட்காரவைக்க உதவினேன்.

பின்னர் அந்தப் பெண் எனக்கு நன்றி சொன்னாள். பதிலுக்கு நானும் சிரித்தேன். அடுத்ததாக அந்தப் பெண் கேட்ட கேள்வி நீங்கள் இந்துவா என்றாள்? ஆம் என்பது போல் தலையசைத்தேன். பதிலுக்கு அவள் தனது மத அடையாளத்தைக் கூறினாள். மேலும் நான் உங்களோடு சில விஷயங்களை பேச ஆசைப்படுகிறேன் என்று சொல்லி என்னிடம் சில புத்தகங்களைக் கொடுத்து சில கருத்துகளை பகிர்ந்துகொண்டாள். நானும் நல்ல விடயங்களை யார் சொன்னால் என்ன? எந்த மதமாக இருந்தால் என்ன! நல்லவற்றை பகிர்ந்துகொள்வது நல்லதுதானே என்று நினைத்து அப்பெண்மணி பேசியதற்கு தலையசைத்து வந்தேன். சிறிது தூரம் சென்றதும். அப்பெண் மற்ற மதங்களை இழிவாகவும் கேவலமாகவும் பேச ஆரம்பித்தாள். அத்தோடு, மற்ற மதங்களின் கோட்பாடு பிழையானது. மேலும் அதை கடைப்பிடிப்பவர்கள் சாத்தான்கள், பேய்களை வணங்குபவர்கள் என்று சொல்லி உருவ வழிபாட்டையும் இந்து மதத்தினர் கடைப்பிடிக்கும் சில வழக்கங்களையும் மிக இழிவாகப் பேசினாள். சாத்தான்களின் வழிபாட்டிலிருந்து விடுபட எங்களிடம் வாருங்கள் என்றாள். அந்த விடயம் எனக்குப் பிடிக்கவில்லை. நான் அதை காதுகொடுத்து கேட்காததுபோல் பாவனை செய்தேன். அவளும் விடுவதாக இல்லை. தொடர்ந்து சத்தமாக பேசி என்னை தர்மசங்கடத்திற்குள்ளாக்கினாள்.

மேலும், இந்த ஞாயிற்றுக்கிழமை உங்கள் வீட்டுக்கு வருகிறோம். இனி உங்கள் வாழ்க்கையில் விடிவு பிறக்கப்போகின்றது. இந்த நற்செய்தியை உங்கள் வீட்டிலும் சொல்லுங்கள் என்று சொல்லி சில புத்தகங்களைக் கொடுத்தாள்.

மதம் என்பது ஒரு மனிதனின் உணர்வுபூர்வமான விடயம். இதை பஸ்ஸிலும் வீடுகளிலும் வந்து சொல்லும் விடயமல்ல. ஒவ்வொரு மதமும் நல்ல நெறியைத்தான் போதிக்கிறதே தவிர, கெட்டதையல்ல. சிலரை வற்புறுத்துவது தவறான விடயம். மேலும் மற்ற மதங்களை இழிவுபடுத்துவது அதைவிட தவறான விடயம். விவேகானந்தர் சொன்னதுபோல் ''தன் மதத்தை மதிப்பவன் எவனோ அவன் அடுத்த மதத்தை இழிவு படுத்தமாட்டான்'' இதை புரிந்துக் கொள்வது நல்லது.



## எதிலும் முன் யோசனை

என்னுடைய தோழி எப்போதும் வெளியே செல்லும்போது தண்ணீர்ப் போத்தல், குடை, சாப்பாடு கொண்டு செல்வது போல மறக்காமல் அவளுடைய பேக்கில் ஒரு ஜோடி செருப்பும் வைத்திருப்பாள்.

அலுவலகத்திலும் வீட்டிலும் அவளை எல்லோரும் கிண்டல் அடிப்பது வழக்கம். ''உன்னுடை பேக்கை யாராவது திறந்துபார்த்தால் என்ன நினைப்பார்கள் வெட்கமாக இல்லையா?'' என்று கூட சொல்லிப்பார்த்து விட்டோம் அவள் திருந்துவதாக இல்லை.

அதன் பிறகு கடந்த வாரம் நான் அலுவலகத்திற்கு செல்லும்போது பஸ்ஸைவிட்டு இறங்கி இரண்டு அடிகூட எடுத்து வைக்கவில்லை. அப்போது என்னுடைய செருப்பு அறுந்துவிட்டது. சன நெரிசலான பகுதியில் எப்படி செல்வது என்று தெரியாமல் ஒரு நிமிடம் தவித்துப்போனேன். பக்கத்திலும் செருப்பு தைப்பவர் இல்லை. இப்படியே எப்படி அலுவலகத்திற்கு செல்வது என்று நினைத்துக்கொண்டிருக்கும்போது அடுத்து வந்த பஸ்ஸில் என்னுடைய நண்பி வந்தாள். என் நிலையைக்கண்டு அவளுடைய பேக்கில் இருந்து செருப்பை எடுத்து கொடுத்துவிட்டு சொன்னாள் ''இப்படி ஒரு நிலை வந்தால் விழித்துக்கொண்டு நிற்காமல் இருப்பதற்காகத்தான் நான் ஒரு செருப்பை எனது பைக்குள் வைத்துக்கொள்கிறேன் இப்போது புரிகிறதா?'' என்றாள்.

ஆம், இது உண்மைதான். பெண்கள் அவசரமாக செல்லும் நேரங்களில் இப்படியான சூழ்நிலைகள் வரும்போது தடுமாற வேண்டிய நிலை வரும். எதற்கும் என் தோழி போல் முன்சிந்தனையோடு நடப்பது தப்பில்லையே.

## குட்டித் தூக்கத்தால் நடந்தது

என்னுடைய தோழியின் அத்தை கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கின்றாள். ஏதோ பெட்டாவிற்கு சாமான் வாங்க காலையில் சென்றாள். வேலை முடிந்து மறுபடியும் வீட்டிற்கு வர பஸ்ஸில் ஏறி ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிட்டார். பிறகென்ன இறங்கவேண்டிய இடத்தைவிடுத்து சொய்ஸாபுரவைத் தாண்டி பஸ் செல்லும்போதுதான் திடுக்கிட்டு விழித்து பார்த்து பஸ்ஸைவிட்டு இறங்கினாள். பிறகு வேறு ஒரு பஸ் எடுத்து வெள்ளவத்தைக்கு வருவதற்குள் அடுத்த தூக்கம் தூங்கி பெட்டா சென்றுவிட்டாள். பிறகென்ன தன்னை நொந்துகொண்டே மீண்டும் வேறு ஒரு பஸ் எடுத்து வெள்ளவத்தைக்கு வருவதற்குள் மீண்டும் தூங்கிப்போய் இறங்க வேண்டிய இடத்தில் விடுத்து அடுத்த ஹோல்டில் இறங்கி நடந்து வீட்டுக்கு வந்தாள்.



இப்படியானவர்களை தனியாக விடுவது ஆபத்து. வயதானவர் என்றபடியால் பரவாயில்லை. இருந்தும் யாரையாவது துணைக்கு அழைத்துக் கொண்டு செல்வதுதான் புத்திசாலித்தனம்.

## குழந்தைகள் முன்பு ஜாக்கிரதையாக பேசுங்கள்

என் தோழியின் மகளுக்கு 6 வயது. ஒரு நாள் அவள் கணவரிடம் ''தினமும் வீட்டுலயும், வேலை செஞ்சுட்டு, அலுவலகத்திற்கும் போய்ட்டு வாறது ரொம்ப கஷ்டமா இருக்குங்க. பேசாம வேலையை விட்டு நின்னுடலாமான்னு தோணுது'' என்றாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவளது மகள், ''ஆமாம்மா... எனக்கும் டெய்லி ஸ்கூலுக்கு போறது கஷ்டமாவும் போராகவும் இருக்கு. நானும் வீட்டுலயே இருந்துடுறேனே!'' என்றாள். இதைக் கேட்ட அவள் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திணறிப் போனாள். குழந்தைகளை வைத்துக்கொண்டு எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்பதைப் பெற்றவர்கள் உணர வேண்டும்.



**தகவல் தொகுப்பு ஆர்.அபி**







# அநாதையாக மரணித்த நடிகை கனகா!

சினிமா ஒரு கனவு மாளிகை என்பார்கள். விளம்பர வெளிச்சமும், பகட்டு வாழ்க்கையும், பெயரும், புகழும் ஒரே நாளிலும் வரலாம். அதேபோல ஒரே நாளில் காணாமலும் போகலாம்.

சினி உலகில் கொடிகட்டிப் பறந்தவர்கள், ஆடம்பர வாழ்வை அனுபவித்தவர்கள் அந்திம காலத்தில் சோற்றுக்கே வழியில்லாமல் சொந்த பந்தங்களின் உதவி இல்லாமல் அநாதையாக மரணித்த பரிதாபங்களை தமிழ் சினிமா நிறையவே கண்டிருக்கிறது.

புகழின் உச்சியில் இருக்கும்போது அவர்களைக் கொண்டாடும் சமூகம் அந்தப் புகழ் வெளிச்சம் மறைந்தபின் அவர்களைக் கண்டுகொள்வதே இல்லை.

தமிழ் சினிமாவில் கரகாட்டக்காரன் படத்தில் அறிமுகமாகி முன்னணி நாயகியாக வலம் வந்த கனகா யாருமற்ற அநாதையாக நோயோடு மரணத்தை தழுவியிருக்கிறார்.

1989 ஆம் ஆண்டு நடிகை தேவிகாவின் மகள் என்ற அங்கீகாரத்தோடு கரகாட்டக்காரன் படத்தில் நாயகியாக அறிமுகமாகினார் கனகா. இந்தப்படம் அப்போது பட்டிதொட்டிகளில் எல்லாம் சக்கைபோடு போட்டது. முதல் படத்திலேயே அன்றைய கிராமத்து இளைஞர்களின் கனவுக் கன்னி அந்தஸ்துக்கு சொந்தக்காரியாகிவிட்டார்.

அதன்பிறகு ரஜினி, கார்த்திக், பிரபு உள்ளிட்ட தமிழ்த் திரையுலகில் பல முன்னணி நடிகர்களுடன் ஏராளமான படங்களில் கதாநாயகியாக நடித்தார். மலையாளத்தில் மோகன் லால், மம்முட்டி, ஜெயராம் உட்பட முன்னணி நடிகர்களுடன் கதாநாயகியாக நடித்துள்ளார். நடிகர் முகேஷுடன் இணைந்து நடித்த 'கோட்பாதர்' என்ற மலையாளப் படம் 200 நாட்களுக்கு மேல் ஓடி சாதனை படைத்தது.

2004 ஆம் ஆண்டு குஸ்ருதி என்ற மலையாளப் படத்தில்தான் கடைசியாக நடித்தார். தமிழில் கடைசியாக சிம்மராசி படத்தில் நடித்தார்.

நடிகை தேவிகாவின் மகள் என்பதைத் தாண்டி கனகாவிற்கு திரையுலகில் ஒரு அங்கீகாரம் கிடைத்தது. அவரின் கண்ணழகு ரசிகர்களைக் கட்டிப்போட்டது. சினிமாவின் கனவு வாழ்க்கை கனகாவிற்கு மெய்பட்டது. ஆனால், எல்லாமே அம்மா தேவிகாவின் மரணம் வரைதான்.



நடிகை தேவிகா
(நடிகை கனகாவின் தாய்)

தேவிகாவின் மரணத்திற்குப் பிறகு கனகாவின் வாழ்க்கையே திசை மாறியது. மகளை வெளி உலகம் தெரியாமல் பொத்திப் பொத்தி வளர்த்தார் தேவிகா. அதனால் அவரது மறைவுக்கு பிறகு கனகாவால் வாழ்க்கையை தனியாக எதிர்கொள்ள முடியவில்லை. அம்மா தேவிகாவால் புறக்கணிக்கப்பட்ட அவரது தந்தையும் அவருக்கு ஆறுதலாக இல்லை.

எனவே தனது தாய் தேவிகா பெயரில் அறக்கட்டளை தொடங்கி, அவரது விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் செயல்படப் போகிறேன் என்றார் நடிகை கனகா.

இந்நிலையில் முத்துக்குமார் என்ற வெளிநாட்டு இன்ஜினியரை திடீர் திருமணம் செய்துகொண்டார். அந்த வாழ்க்கையும் கனகாவுக்கு இனிக்கவில்லை.

யாரைப் பார்த்தாலும் வெறுப்பு, பயம் அவருக்கு. அதனால் ஒரு மனநோயாளி போன்றே நடந்துகொள்ள ஆரம்பித்தார் என அவரைச் சுற்றியிருந்தவர்கள் கூறினர்.

தந்தை தன்னைக் கொல்ல முயற்சிப்பதாகவும், சொத்துக்களை பறிக்க முயற்சிப்பதாகவும் வழக்குப் போட்டார். தன் கணவரை காணவில்லை கண்டுபிடித்துத் தாருங்கள் என்று பொலிஸில் புகார் செய்தார். ஆவி அமுதா என் கணவரை பிடித்து வைத்துக்கொண்டு தர மறுக்கிறார் என்று புகார் செய்தார். இப்படி அவரது நடவடிக்கைகள் அவரை மனநோயாளியாகவே வெளிக்காட்டின. ஆவி அமுதா கனகா மீது தொடுத்த மானநஷ்ட வழக்கு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள தனது வீட்டை காலி செய்துவிட்டுச் சென்றுவிட்டார் கனகா. அவர் எங்கு இருக்கிறார்? என்ன செய்கிறார்? என்று இந்த வாரத்தின் முற்பகுதிவரை தெரியாமலே இருந்தது. கடந்த திங்கட்கிழமை அவரைப் பற்றி அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியது.

கடுமையான புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் கனகா கேரளாவில் உள்ள ஆலப்புழாவில் தனியார் மருத்துவமனை ஒன்றில் ஓராண்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். புற்றுநோய் குணப்படுத்த முடியாத அளவுக்கு முற்றிவிட்டதால் கைவிடப்பட்ட புற்றுநோயாளிகளை அவர்களின் மரணகாலம் வரை வைத்து பராமரிக்கும் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு விட்டார். அந்த மருத்துவமனையில் கனகா மரணத்தை எதிர்பார்த்து புற்றுநோயுடன் போராடிக் கொண்டிருக்கிறார் என்ற தகவல்தான் அது.

கனகா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது அவரைப் பக்கத்தில் இருந்து பார்த்துக்கொள்ளக்கூட யாரும் இல்லை. அவர் யாரையும் அனுமதிக்கவில்லை என்று அந்த மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கறுப்பு, வெள்ளைக் காலத்து கனவுக் கன்னியின் மகள் வண்ண சினிமாக் காலத்தில் மின்னிய நாயகி யாருமற்றவராக மரணப் படுக்கையில் கிடந்தார்.

யாருமற்ற அநாதையாகவே கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் தன் இறுதி மூச்சை நிறுத்திக் கொண்டார்.

மரணப்படுக்கையில் போராடிக் கொண்டிருந்த போது கண்டுகொள்ளாத திரையுலகம் வெறும் பகட்டுக்காக இப்போது போய் கனகாவுக்கு அஞ்சலி செலுத்தக் கூடும்.

தகவல் தொகுப்பு: அரி

# வேண்டாம் இன்னுமொரு பரிதாப மரணம்!

02 ஆம் பக்கத் தொடர்ச்சி

### இயங்காத வைத்தியசாலை!



வெலிஓயா புதுக்காடு தோட்டத்தில் பிரசவ வார்டுகளைக் கொண்ட வைத்தியசாலை அமைந்துள்ளது. சுமார் 10 , 15 ஆண்டுகளுக்கு முன்புவரை இங்குதான் தோட்டத் தாய்மாரின் பிரசவங்கள் நிகழ்ந்தன. எனினும் தற்போது வைத்தியர், தாதிகள் இன்றி இவ்வைத்தியசாலை முறையாக இயங்குவதில்லை. கர்ப்பிணித் தாய்மார் சிகிச்சைக்கும், பிரசவத்திற்கும் கிளங்கன் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது.

### [illegible]

நோயாளிகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல தோட்டத்தில் அம்புலன்ஸ் வண்டி இருந்தாலும் அதன் சேவை உரியமுறையில் கிடைப்பதில்லை என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அம்புலன்ஸ் வண்டி ஆஸ்பத்திரி வளாகத்தில் நிறுத்தி வைக்கப்படுவதில்லை. தோட்டத் தொழிற்சாலை வளாகத்திலேயே நிறுத்தி வைக்கப்படுகிறது. வைத்திய அதிகாரி, தோட்ட நிர்வாகி ஆகியோரிடம் அனுமதி பெற்று அம்புலன்ஸை பெற்றுக் கொண்டாலும் அதற்கு தனியான ஓட்டுநர் இல்லை. வேறொரு இடத்தில் இருக்கும் வைத்திய சேவையாளர் ஒருவரே தற்போது ஓட்டுநராக பணியாற்றுகிறார். அவரை அழைத்து வர நீண்ட நேரம் செல்லும். எனவே அநேகமான சந்தர்ப்பங்களில் அம்புலன்ஸுக்கு காத்திருப்பதைவிட ஆட்டோவில் நோயாளியை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுவிடுவதாக என புதுக்காடு மக்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த கர்ப்பிணித்தாயும் ஆட்டோவிலேயே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கொதித்தெழுந்த மக்கள்

சுமதியின் மரணத்தால் ஆத்திரமடைந்த தோட்ட மக்கள் கிளங்கன் வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும், சுமதியின் மரணத்திற்கு கிளங்கன் வைத்தியசாலையே பொறுப்புக் கூற வேண்டும் எனத் தெரிவித்து சுமதியின் சடலம் கொண்டு செல்லப்படும்போது பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நேற்றுமுன் தினம் நடத்தினர்.

### அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

பிரசவம் என்பது மறுபிறப்பு என்பார்கள். பிரசவத்தாய்மாருக்கு முறையான வசதிகளும் சிகிச்சைகளும் வழங்கப்பட வேண்டும். எனினும் கிளங்கன் வைத்தியசாலையில் முறையான சிகிச்சை வழங்கப்படுவதில்லை என்றும் இதனால் தாய், சேய் இறப்புகள் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அலட்சியத்தாலும், வைத்திய வசதிகள் இன்மையாலும் கர்ப்பிணித் தாய்மாரும் சிசுக்களும் பரிதாபமாக மரணிக்கும் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இதற்காக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### கிளங்கன் வைத்தியசாலையின் குறைபாடுகள்

பல தோட்டங்களை மையப்படுத்தி அமைந்துள்ள கிளங்கன் வைத்தியசாலைக்கு பொகவந்தலாவ,மஸ்கெலியா,நோர்வூட்,கொட்டகலை,வட்டவளை,அட்டன் உட்பட பல்வேறு தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சைக்காக வருகின்றனர் எனினும் இவ் வைத்தியசாலையில் 52 வைத்தியர்களுக்கான தேவையிருந்தும் அனுமதிகக்பட்டிருந்தும் 07 வைத்திய நிபுணர்கள் உட்பட 23 பேர் மாத்திரமே உள்ளதாகவும் 80 தாதியர்கள் கடமையாற்ற வேண்டியபோதும் 44



பேர் மாத்திரமே உள்ளதாகவும் அதிலும் தற்போது 33 பேர் மாத்திரமே சேவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே பொதுமக்களுக்கு உரிய சேவையை வழங்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கபடுகிறது. எனவே இந்த வசதிக்குறைபாடுகளும் நிச்சயம் களைக்கப்பட வேண்டும்.

-ரிஷி

# நையப்புடைக்கப்பட்ட மாலக சில்வா!

08 ஆம் பக்கத் தொடர்ச்சி

வாகன நெரிசல் மிக்க பகுதியான அந்த முச்சந்தியில் பல சமிக்ஞை விளக்குகளும் கண்காணிப்பு கமராக்களும் பொருத்தப்பட்டிருக்கும் இடத்திலிருந்து அந்த குழுவினர் தப்பிச் சென்றுள்ளனர் என்றால் அவர்களுக்கு பலமான பின்புலம் இருக்க வேண்டும்.

இராணுவம் பயன்படுத்தும் வாகனங்களை போன்றதொரு வாகனத்தில் வந்த சிலரே தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி,வாகன தகட்டின் இலக்கம் அமைச்சர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் இலக்கத்தை ஒத்ததாக அமைந்திருந்தது என்று தெரிவிக்கப்படுவது மற்றுமொரு சந்தேகத்தையும் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தாக்குதல் தொடர்பில் 15 பேரிடம் இதுவரையிலும் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கண்காணிப்பு கமராக்களில் தாக்கியவர்களை தெளிவாக அடையாளம் காணமுடியவில்லை என்றும் மாலக்கவின் முகத்தை துணியினால போர்த்தியே தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும் தாக்கிவிட்டு ஓடும்போது கமராவில் தங்களுடைய முதுகுபுறம் தெரியும் வகையிலேயே ஓடியிருக்கின்றனர் என்றும் இதனால் சந்தேக நபர்களை உடனடியாக அடையாளம் காண்பதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் சம்பவத்தை விசாரணை செய்யும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விடயம் கேள்விப்பட்டு கொந்தளித்துப் போனார் தந்தையான அமைச்சர் மேர்வின் சில்வா. அரைக் காற்சட்டையுடனேயே வைத்தியசாலைக்கு விரைந்து வந்த அவர் தனது பாணியிலேயே சவாலும் விடுத்தார்.

இதுபோல் பயந்தாங்கொள்ளி வேலை செய்யாது நேராக வந்து கொடுக்கல் வாங்கல்களை முடித்துக் கொள்ளுங்கள்,. அதற்கு நான் தயாராகவே இருக்கிறேன். சில ஊடகங்களுக்கு இன்று கொண்டாட்டமான நாள். மேர்வினின் மகனுக்கு நல்ல அடியென்பதால் இன்று நன்றாக தூக்கம் வரும் என்றார்.

### காளியின் கோபம்!

இதேவேளை தெய்வம் நின்று கொல்லும் என்பதற்கு அமைவாக முன்னேஸ்வரம் ஆலய பூஜையை அடாவடித்தனமாக தடுத்து நிறுத்திய மேர்வின் சில்வாவின் களனி தொகுதி அமைப்பாளர் பதவியை பறித்த பத்திரகாளியம்மன் அவருடைய குடும்பத்தினருக்கு சோடை காட்டி வருகின்றார் என்றும் பலரும் கூறுகின்றனர். காளி சோடை காட்டுவதாக நம்பும் களனி தொகுதி மக்கள் முன்னேஸ்வரத்திற்கு சென்று அமைச்சர் மேர்வினுக்காக அண்மையில் பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். காளியின் கோபம் என்பதையெல்லாம் விட வினை விதைத்தவன் அதை அறுத்துத்தான் ஆகவேண்டும். எந்தத் தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் உண்டு என்கின்றனர் இன்னும் சிலர். எது எப்படியோ நாட்டில் சட்டமும் ஒழுக்கமும் நிலைநாட்டி சமாதானத்துடன் பொதுமக்களின் வாழ்வுக்கு இடையூறு ஏற்படாதவகையில் பாதுகாத்துக்கொள்வது இந்த அரசாங்கத்தின் தார்மீக கடமை என்பதில் இருவேறு கருத்தில்லை.

நாடோடி







புசல்லாவ நகர புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்தின் திருவிழா கடந்த 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. திருவிழாவின் ஒரு அம்சமாக அருட்தந்தை வில்சன் விஜயசூரிய தலைமையில் நடைபெற்ற விசேட பவனியில் சுமார் 400 இற்கு மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

(ம. சந்ரு, [illegible])

# அக்கினிப் பரீட்சையை எதிர்கொள்ளப் போகும்

## வடக்கு மாகாண சபை!

ஜூலை 29, 1987. சரியாக 26 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகிறது. அதற்கு சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டுகின்றார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் பணியாற்றும் செய்தியாளர்கள் மாத்திரமே இச்சந்திப்பில் கலந்துகொள்கின்றனர். அவர்களில் ஒருவர் இப்பத்தியாளரும் ஆவார். இச்செய்தியாளர் சந்திப்பு முடிந்ததும் பிரபாகரனை புதுடில்லிக்கு அழைத்துச் செல்வதற்கு சுதுமலை அம்மன் கோவில் வீதியில் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் காத்து நிற்கின்றது. செய்தியாளர் சந்திப்பில் கையெழுத்தாக இருக்கும் இந்திய - இலங்கை உடன்படிக்கை பற்றிய விவரங்கள் எல்லாம் விரிவாகப் பேசப்படுகின்றது.

சுதுமலை அம்மன் கோவில் வீதியில் காத்து நிற்கும் இந்தியன் ஹெலிகொப்டரில் ஏறி பிரபாகரன் புதுடில்லி சென்றடைய வேண்டும். அதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பிரபாகரன் செய்தியாளார் சந்திப்பை முடிவுக்குக் கொண்டு வருகின்றார். பிரபாகரன் நிறைவாக ஒன்றை செய்தியாளர்களிடம் தெரிவித்துவிட்டு, சுதுமலை அம்மன் கோவிலை நோக்கி புறப்படுகின்றார். பிரபாகரன் கூறியது என்ன? "நான் ஒரு பிடிவாதக்காரன். பிடித்த பிடியை விடமாட்டேன். என்றோ ஒரு நாள் தமிழீழம் அடைந்தே தீருவேன்..." என்று வைராக்கியத்துடன் கூறிவிட்டு புறப்படுகின்றார். செய்தியாளர்களுக்கு அவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட வாகனத்தில் ஏறி அவரை பின்தொடர்ந்து சுதுமலை செல்கின்றனர். சுதுமலை அம்மன் கோவில் வீதி சனத்திரள். பிரபாகரன் வாகனம் ஒன்றில் வந்திறங்குகின்றார். அவரை கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக பணியாற்றும் கெப்டன் டி.சி.குப்தா கைலாகு கொடுத்து வரவேற்று சனக்கூட்டத்தை விலக்கி ஹெலிகொப்டர் நிற்கும் இடத்திற்கு அழைத்துச் செல்கின்றார். ஹெலிகொப்டரில் ஏறி நின்ற வண்ணம் மக்களை நோக்கி கைகளை அசைத்த வண்ணம் விடைபெறுகின்றார்.

1987 ஜூலை 29 இல் கொழும்பில் இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு. அதற்கு முன்னர் கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதையை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி ஏற்கும் நிகழ்வு. அணிவகுப்பு மரியாதையில் இடம்பெற்ற கடற்படை வீரர்களில் ஒருவர் தான் வைத்திருந்த துப்பாக்கியின் பின்பக்கத்தினால் ராஜீவ் காந்தியின் பிடரியைத் தாக்குகின்றார். துப்பாக்கி அடி முற்றாக ராஜீவ்காந்தியின் பிடரியைத் தாக்கவில்லை. ராஜீவ்காந்தி மயிரிழையில் தப்பினார்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையில் இலங்கை சார்பில் நாட்டின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கையெழுத்திட்டார். இந்தியா சார்பில் அந்த நாட்டின் பிரதமர் ராஜீவ்காந்தி கையெழுத்திட்டார். மாகாணசபை முறைமை இலங்கையில் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல்தீர்வு ஒன்றைக்காண கொண்டுவரப்பட்டதாகும். ஆனால், நாட்டின் சிங்கள மக்கள் வாழும் ஏனைய ஏழு மாகாணங்களிலும் மாகாணசபை முறைமை வெற்றிகரமாக அமுல்நடத்தப்பட்டு வருவது தெரிந்ததே. ஆனால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவ்வாறான நிலை காணப்படவில்லை.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் இந்திய அமைப்பதிப்படை நிலை கொண்டிருந்த காலத்திலே நடத்தப்பட்டது. இணைந்த மாகாண சபைக்கான முதலாவது தேர்தலும் அதுவே. கடைசித் தேர்தலும் அதுவாக இருந்தது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க வடக்கு கிழக்கு இணைப்பு துண்டிக்கப்பட்டது. வடக்கு ஒரு மாகாணமாகவும் கிழக்கு இன்னொரு மாகாணமாகவும் மாறியது.

கிழக்கு மாகாணம் தனியானதாக பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து கிழக்கு மாகாண சபைக்கு இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டன. இரண்டிலும் ஆளும் கட்சி அணியே வெற்றியீட்டியது. வடக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதன் பின்னர் இப்போதுதான் வடக்கு மாகாண சபைக்கு முதல் தடவையாக தேர்தல் நடத்தப்படவுள்ளது.

தேர்தல் மூலம் உருவாகும் வடக்கு மாகாண சபை அக்கினிப் பரீட்சையை எதிர்நோக்கும் என்பது அவதானிகளின் ஆருடம். மாகாண சபை முறைமையை அறிமுகப்படுத்திய 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை எவ்வாறாயினும் நீர்த்துப்போகச் செய்ய சிங்கள பேரினவாத சக்திகள் திடசங்கற்பம் பூண்டு செயல்படுகின்றனர். ஆளும் கூட்டமைப்புக்குள் பங்காளிகளாக இருக்கும் ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணியும் 13 ஐ இல்லாமற் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளன.

இந்த நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் களமிறங்கியுள்ளது. தேர்தலில் அதன் வெற்றியும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 13 ஆவது திருத் தத்தின் கீழ் மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையாக அமுல் நடத்தப்படவேண்டும் என்று தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு நெருக்குதல் கொடுக்கும். அதற்கு ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் ஒத்துப்போகாத நிலை ஏற்படும்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையின்படி 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்துவதற்கு தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட வடக்கு மாகாணசபை நிர்வாகம் மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுக்கும். அவ்வாறான அழுத்தத்திலிருந்து தப்பிக்க மத்திய அரசாங்கம் வடக்கு மாகாணசபை நிர்வாகத்தை கலைக்கும் நிலை ஏற்படும் என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பாகும்.

எனவே, சர்வதேச அழுத்தம் குறிப்பாக இந்தியாவின் அழுத்தம் காரணமாக கொழும்பு அரசாங்கம் வடக்கு மாகாண தேர்தலை நடத்துவது தனக்குத்தானே குறிபறிக்கும் செயலாக மாறிவிடாதா? என்று பேரினவாதிகள் எழுப்பும் கேள்வியாகும்.

இலங்கையைக் கூறுபோட்டு வடக்கு மாகாணத்தை தனது பிராந்தியமாக்குவதற்கு இந்தியா வகுத்த சதித்திட்டம் 13 ஆவது திருத்தத்தின்படி வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் என்ற அழுத்தத்திற்கு காரணம் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கருத்து வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் ஆறு தசாப்த கால தமிழர் உரிமைப்போராட்டத்தில் ஒரு முக்கிய நகர்வாக அமையப் போகிறது. அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் 'அ' வில் ஆரம்பமான தமிழர் உரிமைப் போராட்டம் பின்னர் 'ஆ' வாக மாறி இப்போது 'இ' ராஜதந்திர போராக மாறியுள்ளது. இதன் முக்கிய திருப்பு முனையாக வடக்கு மாகாண சபைத் தேர்தல் அமையப் போகிறது.

எமது இலக்கை அடையும் புதிய பயணமாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி அமையும் என்று நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தபின்னர் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரான ஓய்வுநிலை உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் செய்தியாளர் மத்தியில் கூறியிருக்கின்றார்.

புதிய பயணத்தின் இலக்கு எதுவாக இருக்கப் போகிறது?



அநாமிகன்

## நினைவிழந்து போவதில்லை


பட்டுமேனியில்
பட்டாடை பளபளக்க,
சங்கு கழுத்தினில்
சங்குமாலை அலங்கரிக்க,
கருமேகக் கூந்தல்
அள்ளி முடிந்திருக்க,
ஒற்றைரோஜா அதன்மேல்
செருக்குடன் நிமிர்ந்திருக்க,
மையிடா அடர்புருவம்
வில்லாய் வளைந்திருக்க,
கருவண்டு நயனங்கள்
சுற்றிச் சுற்றி சுழல,
செம்பவள அதரங்கள்
இதழ்விரித்து வழிவிட,
நிறைந்த பல்வரிசை
வெண்முத்தாய் ஒளிவீச,
செந்தாமரை நிறத்தில்
வட்ட வதனம் வசீகரிக்க,
மொட்டவிழா தாமரையாய்
தனங்கள் விறைத்திருக்க
யாழின் குடம்போல்
பின்னழகு
புடைத்திருக்க
கைப்பிடிக்குள்
கொடியிடை
அடங்கி மெருகூட்ட
தோளில் தொங்கும்
தோல் பையுடன்
மென்கரங்கள் வீசி
அன்னநடை பயின்று
பூமியில் உலாவந்த
வான்மதியே
மனதினில் சுழன்றுவரும்
கடந்த நினைவலைகள்
மறக்கவே நினைக்கிறேன்
புதியவை மறந்தாலும்
காதலியின் முதல் முத்தம்போல்
பழையவை மறக்க
முயன்றும் முடியவில்லை
குருதி சுற்று நிற்கும்வரை
மூச்சுக்காற்று முடியும்வரை
நெஞ்சின் நினைவலைகள்
நினைவிழந்து போவதில்லை

கற்பிட்டி வஹாப்.

## வேண்டுதல்

மெழுகைப் போல்
மென்மையால் இரு,
உருகி விடாதே,
நெருப்பைப் போல்
தணலாய் இரு
எறித்து விடாதே,
முகம் காட்டும்
கண்ணாடியாய் இரு,
உன்னிலிருக்கும் என்னை
தினமும் நான் பார்க்க

சாந்தி சங்கர்,
வெஸ்ட் ஹோல்





## அன்புள்ள அம்மா

அம்மா என்பது மூன்றெழுத்து
அவள்தரும் பாசம்
மூன்றெழுத்து
பத்துமாதம் பெற்று
சீராட்டி
தன் வலியை
பொறுத்திருக்கிறாளே
அந்த அன்பு
உள்ளம் அவளுக்கு
நன்றியுடன் இருக்க
வேண்டும்
என்றென்றும் உன்
அன்புள்ள
பிள்ளையாக

எஸ்.எச்.நுஸ்ரத்,
திருகோணமலை

## இரசிகன்

இமயமலை கவிபாட
தென்னிந்திய மண் தளைத்தோங்க
சூரியனாய் உதித்த
சூப்பர் ஹிட் ஹீரோ
7 ஆம் அறிவை
பயன்படுத்தி பலரது
அற்ப அறிவினை
வெற்றிகொண்ட நீ
மாற்றானில் என் மனதை
களவாடிய இரசிகனாகி
விட்டாயடா - மீண்டும்
சிங்கம் 2 வில் சிறப்புற
என் வாழ்த்துக்கள்
மும்தாஜுக்கு சாஜஹான்
கட்டிய கல்லறை
தாஜ்மஹாலைப்போல
உனக்காக நான் கட்டிய
என் மன அறையில்
இரசிகன் என
எப்போதும் நிலைத்திருக்கும்
சூர்யா உன்னை
கவிதைத் துளியால்
களவு கொள்ளும்

கவிதா, டன்ஸ் லேன்ட்டிக்வல

## பிள்ளை மனம் கல்லு

முதுகோரம் வயிறொட்டி
அத்தெருவோரம் ஓர் மாது
வறுமையின் கொடுமையினால்
கைநீட்டி பிச்சை கேட்கிறது
வழிப்போக்கர்களிடம்...
அம்மாதை பார்த்த கனம்
என் மனக் கண்முன்
என் தாயின் உருவம்
நிழலாடிட
அருகில் சென்று தாயே
என்றேன்
கண்ணீர் உகுத்தவாறு
என் முகம் நோக்கி
யாரப்பா நீ? என்றாள்....
உன் முகத்தில் என்
தாய்முகம்
தெரிகிறது தாயே! நீ
இத்தெருவோரம்
கிடந்திட காரணமும்
யாதோ?
என வினவினேன்!
பத்தும் பெத்தேன் - அன்று
பத்திரம் பாராது
நடுத்தெருவில்
கைவிடப்பட்டேன் -
இன்று
அதனால் வயிற்றுப்பசி
களையவென
கரம் நீட்டிவிட்டேன் -
இத்தெருவோரம் நின்று
அத்தாயின்
வார்த்தைகளால்
மனம் குமுறி அழ
நிலைதடுமாறி
விழிகளிரெண்டும்
கண்ணீரை வெகுவாக உகுத்தன

எம்.யூ.அல்சாத்,
ஓட்டமாவடி

## க வி தை க ள்



## லயத்து சிறைகள்

வட்டமான உலகம்
அதில் எத்தனையோ லயத்து
சிறைகள்!
நான்கிற்கு ஆறு அளவுகொண்ட
சதுர அறைகள்
ஐயோ..... என்ன கொடுமை
கண்களைத் திறந்தாலும்
இருள்... கண்களை மூடினாலும்
இருள்... சிந்திக்க
நினைத்தேன்
சிதறியது உள்ளம்!
முயற்சி செய்தேன் தாக்கினான்
அரக்கன்
அதைத்தாண்டி வந்ததன்
விளைவே - இந்த இல்லம் என்
நல் உள்ளம் போல்

டி.பிரியதர்ஷினி,
கட்டுக்கித்துல



## என்னவனே!

உறவுகள் கூடி
எழுதி வைத்த
நம் காதல் காவியம்
முற்றுப்புள்ளி இடமுன்னே
முடிந்து போனது
நீ சோகங்களை
விதைத்த
இவன் மனதுகளில்
புன்னகைகளை
எதிர்பார்க்கிறாய்
முடியவில்லை
உன் நினைவுக் கறையான்
இவன் நெஞ்சுக்
கூட்டை
அரிக்கிறது
உன்
நினைவுகள் சுமந்த
இவள் இதயம்
இன்று உடைந்தழுவதை
இனி எந்த
தட்டுகளில் ஏந்துவது
என்
கனத்துப்போன
இதயத்தோடும்
கண்ணீர் நிரம்பிய
விழிகளோடும்
காத்துக் கொண்டு
இருக்கிறேன்
நான் தந்த
கடிதங்களையும்
பரிசுகளையும் திருப்பித்
தந்தது போல -
என்னிடமிருந்து
நீயாக எடுத்த
என்
இதயத்தையும்,
நினைவுகளையும் திருப்பித்
தந்துவிடு

ஆர்.நிர்மலாதேவி,
வெலிஓயா அட்டன்.

# சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைவோம்!

எமது நாட்டினுள் பல்லின மக்கள் வாழும் அதேவேளை ஒவ்வொரு இனங்களுக்குமிடையே உள்ள சமய கலாசார மற்றும் மொழிகளின் வேறுபாட்டை புரிந்துகொண்டு அவர்களின் சுயகௌரவத்தை கௌரவப்படுத்தி சகோதரத்துவத்துடன், ஒரே இலங்கை மக்களாக வாழும் பாக்கியமானது எமக்குரியதாக உள்ளது. ஒரு தாய் பிள்ளைகளாக வெற்றியின் ஏணிப்படிகளை நோக்கிச் செல்ல இது சிறந்த வழியாக அமைகின்றது.



எமது இலங்கை தேசத்தினுள் பல்வேறு மொழிகளை பேசும் மக்கள் வாழ்வதனால் உலகத்திலுள்ள பல நாடுகள் போல இலங்கையும் பல்வேறு மொழிகளை பேசும் நாடாக அறிமுகப்படுத்த முடியும். சகல மக்களும் தமது தாய் மொழியானது தனது சுயகௌரவத்தில் ஒரு பாகமாக எண்ணும் அதேவேளை தமது தாய்மொழியில் அன்றாட வேலைகளை நிறைவேற்றுவதே அவர்களின் விருப்பமாகவும் உள்ளது. ஏனைய மொழிகளை மதித்தல் மற்றும் பயன்படுத்துவதன் மூலம் அது சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு சிறந்த வழியாகவும் அமைகின்றது.

இவ்வாறு மொழி உரிமைகளை நிலைபெறச் செய்யும் ஒருமைப்பாட்டு சமூகமொன்றை கட்டியெழுப்பும் பொறுப்பானது அரசாங்கத்திற்கு உரியதாகும். நாட்டில் உச்சமட்ட ரீதியான அரசியல் யாப்பின் மூலம் அதற்குரிய சட்டதிட்டங்கள் அமைந்துள்ள அதேவேளை அதன் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் அரச கரும மொழிகளாக அமுலாக்கப்பட்டன. இவையனைத்து நடவடிக்கை களின் மூலம் ஒருமைப்பாட்டை குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் என அறியக் கூடியதாக உள்ளது.

சமூக ஒருமைப்பாடு என்பது சகல மக்களுக்கும் சமநிலையை ஏற்படுத்துவதன் ஊடாக அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதாகவும் அதில் எந்தவிதமான வேறுபாடுகளையும் மேற்கொள்ளவில்லை. ஆண், பெண் சமநிலையை பாதுகாக்கும் வாய்ப்பும் குலம், கல்வி, உட்கட்டமைப்பு, பிறப்பிடம், கிராமம், தோட்டம் மற்றும் நகரம் குறித்த விசேட தேவைப்பாடுகள் உள்ள பிரஜைகளுக்கு சமனான வாய்ப்புகளை அனுபவிக்க சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் குறைந்த வரப்பிரசாதங்களை அனுபவிப்பவர்களுக்கு சமனான வாய்ப்புகளை வழங்கும் சமூகம் ஒன்றை உருவாக்குவதன் மூலமே சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்.

அந்தவகையில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு ஊடாக நாட்டின் ஒருமைப்பட்டை ஏற்படுத்துவதற்காக பல்வேறு வகையான திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. அதில் ஒன்றுதான் குறிப்பிட்ட அமைச்சினால் நடத்தப்பட்டு வரும் தேசிய ஒருமைப்பாட்டு வாரமாகும். இந்த தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தின் ஊடாக பல்வேறு விழிப்புணர்வுகள், செயலமர்வுகள், திரைப்பட விழாக்கள், ஊர்வலங்கள் என்பன செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் வழிகாட்டலில்



மேற்கொள்ளப்படும் இந்த தேசிய ஒருமைப்பாட்டு வாரம் நாடளாவிய ரீதியில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் இரத்தினபுரியிலும் சிறப்பாக நடந்தது. வாரத்தின் இறுதி நிகழ்வாக தேசிய ஒருமைப்பாட்டுக்கான ஊர்வலம் இடம்பெற்றது. இரத்தினபுரி சிவாலி மைதானத்தில் ஆரம்பித்த இந்த ஊர்வலம் மொரகஹாயட என்ற இடத்தில் நிறைவுபெற்றது. இவ் ஊர்வலத்தில் பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டதுடன் வாகன பேரணியும் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக் கார, பாராளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கும்புர, மாகாண சபை வேட்பாளர் ரூபன் பெருமாள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



இந்த ஊர்வலம் சமூகங்களுக்கிடையே உணர்வுடன் ஒன்றிணையக்கூடிய ஒருமைப்பாட்டு ஊர்வலமாக காணப்பட்டமை சிறப்பம்சமாகும்.

எஸ்.சந்திரமோகன்

## இணையத்தள பயிற்சிப் பட்டறை

எதிர்வரும் ஆகஸ்ட் 04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பெண்ணியம்.கொம், மலையகம்.கொம், தலித்தியம்.கொம் ஆகிய இணையத்தளங்களின் கூட்டு முயற்சியில் நடாத்தப்படவுள்ள பயிற்சிப் பட்டறையில் ஆதிக்க சித்தாந்தங்களை உடைத்தெறிவதற்கான இணைய நுட்பங்கள், இணையத் தளங்களை கிரமமாக நடத்துவதும், அதற்கான எளிய முறைகளும் என்ற தலைப்புகளிலான கருத்தாடல்கள் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சிப்பட்டறையில் மட்டுப்படுத்தப் பட்ட நபர்களே அழைக்கப்படவுள்ளதால், ஆர்வம் உள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புக் கொள்ளலாம்.

கேஷாயினி 0777259002,

லெனின் மதிவானம்- 072 4142337,

என்.சரவணன் 0774477068

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி

## 01.08.13 முதல் 07.08.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | நட்பு | போட்டி | வரவு | கவனம் | ஆர்வம் | வெற்றி | சுகம் |
| ரிஷபம் | இலாபம் | செலவு | முயற்சி | நட்பு | பணிவு | செலவு | பக்தி |
| மிதுனம் | உதவி | சிக்கல் | நன்மை | நற்செயல் | பாசம் | தெளிவு | ஓய்வு |
| கடகம் | நன்மை | இலாபம் | பக்தி | போட்டி | செலவு | பயம் | பரிவு |
| சிம்மம் | ஆதாயம் | முயற்சி | மேன்மை | பக்தி | அனுகூலம் | தடங்கல் | பாசம் |
| கன்னி | நிம்மதி | விவேகம் | பாராட்டு | இரக்கம் | நலம் | மேன்மை | நட்பு |
| துலாம் | தேர்ச்சி | வரவு | நலம் | வரவு | பெருமை | சோதனை | நன்மை |
| விருச்சிகம் | சினம் | சிந்தனை | சிக்கல் | சுபம் | வரவு | முயற்சி | செலவு |
| தனுசு | சிக்கல் | கோபம் | சினம் | உற்சாகம் | சினம் | நலம் | ஆதரவு |
| மகரம் | அசதி | வெற்றி | செலவு | உழைப்பு | சிந்தனை | சிரமம் | வெற்றி |
| கும்பம் | இலாபம் | எதிர்ப்பு | பாசம் | மறதி | சாந்தம் | ஈகை | போட்டி |
| மீனம் | முயற்சி | நற்செயல் | பணிவு | சிரமம் | அமைதி | உழைப்பு | பொறாமை |

## பப்ரல் நிறுவனத்தின் நடமாடும் சேவை





பப்ரல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட மக்களின் நலன் கருதி அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் மற்றும் ஏனைய ஆவணங்களை பெற்றுக் கொடுக்கும் முகமாக நடமாடும் சேவை கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நடமாடும் சேவையில் அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்கான புகைப்படங்கள் இலவசமாக பெற்று கொடுக்கப்படுகின்றன. அடுத்த நடமாடும் சேவை அடுத்த மாதம் 3 ஆம் திகதி பொகவந்தலாவை பிரதேசத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து நுவரெலியாவிலும் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

க.கிஷாந்தன்

## லுணுகலை பிரதேச சபைக்கு அமைச்சர் செந்தில் விஜயம்

ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் லுணுகலை பிரதேச சபைக்கு அண்மையில் திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். லுணுகலை பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் பி.சுரேஷ் மற்றும் உறுப்பினர் கணேசமூர்த்தி ஆகியோர் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே அமைச்சர் அங்கு விஜயம் செய்திருந்தார்.



அமைச்சர் விஜயம் செய்திருந்த சந்தர்ப்பத்தில் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு சபைத் தலைவர் ஆனந்த சில்வாவின் தலைமையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போதும், அமைச்சரின் வருகையைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டதுடன் பிரதேச சபை உறுப்பினர்கள் ஊடான கலந்துரையாடல் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இக் கலந்துரையாடலில் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இச் சந்திப்பின்போது உரையாற்றிய அமைச்சர் செந்தில் தொண்டமான்; நான் உங்கள் பிரதேச சபைக்கு விஜயம் செய்து வெறுமனே சென்றால் நன்றாக இருக்காது. ஆகவே, பிரதேச சபை உறுப்பினர்கள் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பேதமின்றி அனைவருக்கும் சமூக சேவைகள் அமைச்சின் ஊடாக உபகரணங்களுக்கும், பொது சன உதவித்தொகை வழங்குவதற்குமான நிதியொதுக்கீட்டினையும் மேற்கொண்டிருக்கிறேன்.

ஆகவே, நீங்கள் அனைவரும் பயனாளிகளை இனம் கண்டு அவர்களது பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பிக்கவும். அத்தோடு, லுணுகலை பிரதேச சபையின் ஊடாக மருத்துவ முகாம் ஒன்றினை நடத்துவதற்கும் உதவி புரிகின்றேன். மேலும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா ஒவ்வொரு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான அனுசரணையை எனது அமைச்சின் ஊடாக வழங்குகின்றேன். ஆகவே அதற்கான ஏற்பாடுகளை பிரதேச சபை உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் பிரதேச சபை உறுப்பினர்கள் அமைச்சரிடம் பல கோரிக்கைகளை முன்வைத்தனர். தொடர்ந்து அமைச்சர் பிரதேச சபையின் நிறைவு பதிவேட்டில் கையொப்பமிட்டதுடன் விடைபெற்றுச் சென்றார்.

கே.எஸ்.சரன்


## லுணுகலை இராமகிருஷ்ணாவில் மகிந்தோதய ஆய்வுகூடம்

நகர்புற பாடசாலைகளுக்கு இணையாக பின்தங்கிய பிரதேச பாடசாலைகளை தரமுயர்த்தும் ஜனாதிபதியின் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின்கீழ், லுணுகலை இராமகிருஷ்ணா கல்லூரியில் தொண்ணூறு இலட்சம் (90) ரூபா செலவில் மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கான அடிக்கல் நாட்டுவிழா அதிபர் இராஜரட்னத்தின் தலைமையின் கீழ் முன்னாள் பிரதி சுகாதார அமைச்சர், ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் வடிவேல் சுரேஷ் ஆகியோரின் தலைமையின் கீழ் நடைபெற்றன.

லுணுகலை நிருபர்

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க



★ ஆயிரம் முறை நீ...!
அவமானப்படுத்தினாலும்
அதை எல்லாம் மறந்து
உன்னிடம் மறுபடியும் பேச
துடிக்கும் அன்பே உண்மையான அன்பு...!

★ இரக்கப்படுபவன் ஏமாந்து போகலாம். ஆனால்,
தாழ்ந்து போவதில்லை...!
ஏமாற்றுபவர்கள் வெற்றி பெறலாம். ஆனால்,
கடைசி வரை சாதிப்பதில்லை...!

சந்தித்தே ஆக வேண்டிய பிரச்சினைகளைக் கண்டு ஓடினால் தெருநாய் போல் அது நம்மைத் துரத்தும். துணிவு என்ற கல்லைக் கையில் எடுத்தால் அது தலைதெறிக்க ஓடும்.



அஞ்சாமையை அணிகலனாகப் பூண்டவர்களுக்கு மலையளவு துன்பங்களும் கடுகாகும்!!!

காயங்கள் தாங்காமல்
கல் தெய்வமாவதில்லை...
வருத்தங்கள் வராமல்
வாழ்வில் வசந்தம்
வருவதில்லை...



என்ன நடந்து
விடுமோ என்று
யோசித்து இருப்பதை
விட....
முயன்று பார்...
எழுந்தால் வெற்றி
வீழ்ந்தால் அனுபவம்



எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருந்தால்தான் விளக்கு தொடர்ந்து எரிகிறது. அதேபோல அன்பு என்னும் வெளிச்சம் நம் மீது இடைவிடாமல் படர வேண்டுமானால், நம்மிடம் இருந்தும் அன்பு தொடர்ந்து வெளிப்பட வேண்டும்

- அன்னை தெரேசா -

பணக்கார இளைஞனின் விலையுயர்ந்த கார் நின்றுகொண்டிருந்தது. ஏழைச் சிறுவன் ஒருவன் எட்டி நின்று அந்தக் காரையே ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

சிரித்துக்கொண்டே அந்த இளைஞன் சொன்னான், இது என் அண்ணன் எனக்குப் பரிசளித்தது.

சிறுவன் முகத்தில் வியப்பு.

உனக்கு அப்படி ஓர் அண்ணன் இருந்திருக்கலாம் என்று ஆசைப்படுகிறாயா? இளைஞர் கேட்டார்.

சிறுவன் சொன்னான், இல்லை! அப்படியோர் அண்ணனாக வளர வேண்டுமென்று விரும்புகிறேன்.

நம்பிக்கையுணர்வு நல்லெண்ணங்களையே வளர்க்கும்.

கரப்பான்பூச்சிக்கு பிறகு எல்லா சூழலிலும் வாழப் பழகிய உயிரினம் தமிழனாகத்தான் இருக்கும்...

இப்பூவுலகில் உன்னைப் பார்த்தவுடன்
முடிவெடுத்துவிட்டேன்,
இனி வாழப்போவது இந்தப்
பூவுக்காகத்தான்!!!

- தாய் தந்தை -



நான் பார்க்க அசிங்கமா இருக்கனா?
இந்தக் கேள்விக்கு சிலரின் பதில்கள் எப்படியிருக்கும்

**நண்பர்கள்:** அதுல என்ன டவுட், காட்டு குரங்கு மாதிரி இருக்க...

**காதலி:** சேச்சே அத்தனை அசிங்கமில்லை, லைட்டா சில சேஞ்ச் பண்ணினா இன்னும் அழகா இருப்பாய்...

**அப்பா:** ரொம்ப முக்கியம் போய் படிக்கிற வேலையைப் பாரு எருமைமாடு....

**அம்மா:** எந்த குருட்டு நாய் சொன்னது, நீ ராஜா மாதிரி இருக்க, என் தங்கம்...

இதுல இருந்து என்ன தெரியுது ???? (அம்மா எப்பவுமே தன் பிள்ளைய விட்டுக் கொடுக்கமாட்டார்)

## ஒரு நல்ல மேலாளர் (மெனேஜர்) எப்படியெல்லாம் இருப்பார்?

★ தனக்கு தெரிந்த அத்தனை தொழில் நுட்பங்களையும் கற்றுத் தந்து நம் திறமைகளை வளர்த்து விட வேண்டும் என்ற எண்ணம் உடையவராய் இருப்பார்.

★ புதிதாய் வந்த நமக்கு அலுவலகம் பழகும் வரையில், பக்கபலமாய் இருப்பார். மெல்ல மெல்ல நாமே தனித்துச் செயல்படும்படி செய்திடுவார்.

★ எந்த சூழ்நிலையிலும் தேவையற்ற தனிப்பட்ட கோபங்களை நம்மிடம் காட்டமாட்டார்.

★ வேலையில் நாம் தவறு செய்துவிட்டால் ''தவறு செய்ய செய்யத்தான் பாடங்கள் நிறையக் கற்றுக்கொள்ள முடியும்'' என்று தட்டிக் கொடுத்தபடியே தவறுகளைச் சரி செய்வார்.

★ நான் வந்தால் எழுந்து நிற்க வேண்டும், என்னிடம் நீ இப்படித் தான் நடந்துகொள்ள வேண்டும், இப்படித் தான் பேசவேண்டும் என்று தேவையற்ற விதிகளை திணிக்கமாட்டார்.

★ ஒரு வேலை கொடுத்து, அதைச் செய்து முடிக்கும் முன்னே அடுத் தடுத்த வேலைகளை திணிக்கமாட்டார். நம் வேலைப் பளு அதிகமாகையில், இதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று பணிகளைப் பகிர்ந்து கொள்வார்.

★ நாம் எந்தெந்த துறையில் பின்தங்கி இருக்கிறோமோ, அந்த துறைகளில் வேலைகளைத் தந்து நம் சுயமுன்னேற்றத்திற்கு உதவுவார்.

★ வேலைக்கு சேர்ந்த சில நாட்களிலேயே, நம்மை நன்றாக அறிவார். நம்மால் எதைச் செய்ய முடியும், எதைச் செய்ய முடியாது, எந்த வேலையைச் செய்ய நாம் தகுதி வாய்ந்தவர், நம் தொழில்நுட்ப அறிவு எந்த நிலையில் உள்ளது, எங்கெல்லாம் நம் அறிவு இன்னும் வளர வேண்டும் போன்ற எண்ணற்ற விடயங்களை அறிந்து அதற்கு ஏற்றாற் போல் நம்மை வேலை வாங்குவார்.

★ மொத்தத்தில் ஒரு நல்ல மேலாளர், தன் கையில் களிமண் கிடைத்தாலும் அதை அழகான மண் பொம்மையாக மாற்றிடும் சக்தி வாய்ந்தவராக இருப்பார்.

'I Love
Walking in the
Rain. Because,
Nobody can
see me Crying"

-Charlie Chaplin



## துறவால் கண்ட பயன்?


பெருஞ்செல்வந்தராக இருந்த பட்டினத்தார் திடீரென்று ஒரு நாள் எல்லாவற்றையும் துறந்து துறவியாகிவிட்டார்.

அதை கேள்விப்பட்ட அரசன் தன் சுற்றம் சூழ ஆரவாரமாக அவரைக் காணவந்தான். பட்டினத்தார் ஓரிடத்தில் வெறுங்கோவணத்துடன் ஆண்டிக்கோலத்தில் அமர்ந்திருந்தார்.

அரசன் அவரை வணங்கி, எமக்கு இணையாக செல்வம் படைத்திருந்த நீர், எல்லாவற்றையும் துறந்துவிட்டீர். இதனால் நீர் கண்ட பயன் என்ன? என்று அலட்சியமாகக் கேட்டான்.

அவை எல்லாம் இருந்திருந்தால் நான் உம் முன் நின்றிருப்பேன். துறந்ததால் இப்போது என் முன் நீர் நிற்கிறீர். இந்த சிறப்பு ஒன்று போதாதா...!

என்று அமைதியாக பதிலளித்தார் பட்டினத்தார்.




குழந்தைகள் என்றால் பிடிக்காத, நேசிக்காத பெற்றோர் யாராவது இருப்பார்களா? அதிலும் தவமாய் தவமிருந்து பெற்ற குழந்தை என்றால் பெற்றோர் காட்டும் பாசத்திற்கு அளவுண்டா.

மதுவுக்கு திருமணம் முடித்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பெற்றெடுத்த குழந்தைதான் துவாரகா.

துவாரகா பிறந்ததும் குடும்பத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால் அந்த சந்தோஷம் நீடிக்கவில்லை. துவாரகா மாற்றுத் திறனாளியான குழந்தை என்பது எட்டு மாதத்திற்கு பிறகுதான் தெரிந்தது


மதுவுக்கும் மதுவின் கணவர் கணேசனுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. கடவுள் கொடுத்த முதல் குழந்தை என்ன கஷ்டம் வந்தாலும் இதை வளர்த்தெடுப்போம் என்ற நம்பிக்கையில் மதுவும் கணேசனும் குழந்தை மீது பாசத்தைக் கொட்டி வளர்த்தார்கள்.

துவாரகாவுக்கு எந்தநேரமும் செல்போனில்தான் விளையாட்டு. அதை எடுத்து விளையாடிக் கொண்டே இருப்பாள். அதைப் பிடுங்கி வைத்தால் கத்தி அழுவாள். துவாரகா எப்போதும் மாடியில் உள்ள பெட்ரூமில்தான் விளையாடுவாள். அதை விடுத்து அவள் வேறு எங்கும் வரமாட்டாள். அப்படி அழைத்து வந்தாலும் மீண்டும் மாடிக்கே போய் அவளது மெத்தையில் படுத்துக் கொண்டு விளையாடுவாள்.

இப்படியே குழந்தைக்கு 8 வயது வரும்போது ஒருநாள் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. உடனே கணேசன் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். துவாரகாவை காப்பாற்ற வைத்தியர்கள் எவ்வளவோ பாடுபட்டார்கள். இருந்தும் இறைவன் இப்படி ஒரு குழந்தை இவர்களுக்கு வேண்டாம் என்று நினைத்தாரோ என்னவோ துவாரகா இறந்து விட்டாள்.

துவாரகாவை மறக்க முடியாமல் கணேசனும், மதுவும் தவித்தார்கள். மாடியில் உள்ள பெட்ரூமில் எங்கு பார்த்தாலும் அவளது நினைவாகவே இருந்தது. இவர்களால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

மாடி அறையைப் பூட்டிவிட்டு கீழே உள்ள ஒரு அறையை பயன்படுத்தினார்கள். அன்றில் இருந்து யாரும் மாடிக்கு செல்வதே இல்லை. கணேசன் ஒரு வர்த்தகர். துவரகா இறந்து மாதமொன்றாகி விட்டது. கணேசன் தன் வியாபாரத்தைக் கவனிக்கச் சென்றுவிட்டார். வீட்டில் மது மட்டும் சமைத்துக் கொண்டிருந்தாள். அப்போதுதான் அந்த விபரீதம் நடந்தது.




மதுவின் தொலைபேசி மணியடித்தது.

ஓடிச்சென்று பார்த்தாள். அழைப்பில் கணேஸ் என வந்தது. மது அழைப்பை ஒன் செய்து ஹலோ... ஹலோ... என்றாள்.

பதில் இல்லை.

போனை மேசை மீது வைத்து விட்டு மீண்டும் சமையலைக் கவனித்தாள்.

சிறிது நேரத்தில் மீண்டும் மணி ஒலித்தது. சென்று செல்போனை பார்த்தால் அதேபோன்று கணேஸ் என்று விழுந்தது. ஒன் செய்து ஹலோ.... ஹலோ... என்றாள்.

மறுபக்கத்தில் இருந்து வந்த குரல் மதுவை மூச்சடைக்க வைத்தது.

ஆம்! அது துவாரகாவின் குரல்.

ஆ.....ஊ..ஈ... ம்..அம்மா....மா.. என்று கேட்டது.

அப்படியே தலை சுற்றிவிடும் போல் இருந்தது. ஒருவாறு மானதை திடப்படுத்திக்கொண்டு மது கணேசனுக்கு அழைப்பை ஏற்படுத்தினாள். என்ன ஆச்சரியம்.

போன் வீட்டில் அதுவும் மாடி அறையிலிருந்து மணி அடித்தது.

ஒரு நிமிடம் தன் இதயமே நின்று விடும்போல் இருந்தது.

திடீரென்று மீண்டும் மணி அடித்தது. போனைக் கையில் எடுப்பதற்கே பயமாக இருந்தது.

போனில் விழுந்த நம்பர் புதியதாக இருந்தது.

உடனே ஒன் செய்து ஹலோ.... என்றாள்.

தொலைபேசியில் கணேசன் "ஹலோ மது நான் என் போனை மறந்து வீட்டிலேயே வைத்துவிட்டு வந்து விட்டேன். கடையில் வேலை செய்யும் ராஜாவை அனுப்புகிறேன். போனை அவனிடம் கொடுத்தனுப்பு" என்று போனை வைத்துவிட்டார்.

மது மீண்டும் கணேசன் எடுத்த இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தினாள். ஆனால் கணேசன் கதைத்தது ஒரு கொமினிகேசனில் இருந்து. மதுவால் மீண்டும் தொடர்புகொள்ள முடியவில்லை.

ஒருவாறு மனதை திடப்படுத்திக்கொண்டு மாடிக்கு சென்று பார்த்தாள். கட்டிலின் மேல் போன் இருந்தது. ஓடிச்சென்று போனை எடுத்துப் பார்த்தால் மது என்ற இலக்கத்திற்கு இரண்டு முறை டயல் செய்யப்பட்டிருந்தது.

வீட்டில் மதுவைத்தவிர வேறு யாரும் இல்லை. வியர்த்து விறுவிறுத்துப் போனாள்.

இனி ஒரு நிமிடம் கூட மாடியில் இருக்கக்கூடாது என்று சட்டென்று போனை எடுத்துக் கொண்டு கீழே வந்தாள்.

சிறிது நேரத்தில் ராஜா வந்தான்.

அவனிடம் போனைக் கொடுத்து அனுப்பினாள்.

இரவு வீட்டுக்கு வந்த கணேசனிடம் நடந்ததை சொல்லி போனை அவரிடம் காட்டினாள்.

கணேசன் "எதையும் நம்பவில்லை. நான்தான் காலையில் மாடியில் உடுப்பு காயப்போட சென்ற நேரம் போனை ரூமில் வைத்திருப்பேன், ஏதாவது அமுத்துப்பட்டு தானாக அழைப்பு வந்திருக்கும்" என்று சமாதானப்படுத்தினான்.

இருந்தும் மதுவுக்கு ஒரு சிறு குழப்பம் இருந்து கொண்டுதான் இருந்தது.

அன்று இரவு மது நல்ல தூக்கத்திலிருந்தாள். இரவு 1.50 இருக்கும். கணேஷ் பாத்றூமுக்கு சென்றுவிட்டு மீண்டும் வந்து படுத்தநேரம் மாடிப்படியில் யாரோ ஏறி இறங்கு சத்தம் கேட்டது.

இந்த நேரத்தில் யார் என்று கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான். யாரும் இல்லை. சிறிது நேரத்தில் மாடியில் ஆ.... ப்..பா! ஊ.... என்ற துவாரகாவின் சத்தம் கேட்டது. ஒரு கணம் கணேசனுக்கு பயம் வந்தது.

மீண்டும் வந்து பெட்சீட்டை இறுகப் போர்த்திக் கொண்டு படுத்து விட்டான்.

மறுநாள் காலையில் 5.00 மணிக்கு மீண்டும் கணேசனின் தொலைபேசி அழைப்பிற்கு மதுவின் இலக்கத்தில் இருந்து அழைப்பு வந்தது.

போனை கையில் எடுத்து திரும்பிப் பார்த்தால் பக்கத்தில் மது தூங்கிக் கொண்டிருந்தாள். திடுக்கிட்டுப் போனான்.

உடனே மதுவை எழுப்பினான். இருவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. கணேசன் மதுவின் இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தினான்.

என்ன ஆச்சரியம் மணி அடித்தது மாடியில் உள்ள அறையிலிருந்து.

தான் பெற்ற குழந்தைதான் என்றாலும் அவள் ஆவியாக அலைவதைக் கண்டு இருவரும் பயந்தார்கள். கணேசன் மாடி அறையை உடைத்து புதிய அறை மற்றும் பெல்கனி அமைத்து, புதிய டைல்ஸ் பதித்து துவாரகா இருந்த தடம் தெரியாமல் வீட்டை மாற்றினான்.

ஒரு மாதத்திற்குள் வீட்டுவேலை முடிந்தது. மறுநாள் ஐயரை அழைத்து பூசை செய்து பால் காய்ச்ச முடிவெடுத்திருந்தார்கள்.

மறுநாள் காலை மாடிக்குச் சென்றவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

ஆம் அங்கே பதிக்கப்பட்டிருந்த டைல்ஸ்கள் எல்லாம் அப்படியே பெயர்த்தெடுக்கப்பட்டிருந்தன. வீடே ஒரு போர்க்களமாக இருந்தது. இனியும் தாமதித்தால் ஆபத்து என்பதைப் புரிந்துகொண்ட கணேஸ், ஒரு பூசாரியை அழைத்து வந்து வீட்டுக்கு பரிகாரம் செய்தான். அது மட்டுமன்றி தானம் கொடுத்து, துவாரகாவின் சாந்தி கிரியைகளுக்கும் ஏற்பாடு செய்தான்.

இப்போது மதுவுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இருந்தும் கணேசனாலும் மதுவாலும் துவாரகாவை மறக்கமுடியவில்லை!

தகவல் தொகுப்பு - அபி

**திகில் அனுபவங்களை**
**பகிர்ந்து கொள்ளுங்கள்**

**தேர்தல்**
**சிறப்பிதழ்**

அடுத்தவாரம் முதல் உங்கள் உதயசூரியனில் விசேட தேர்தல் சிறப்பிதழ்.
வேட்பாளர்களே !
கட்சிகளே !
உங்கள் செய்திகள் , விளம்பங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்!

**0718085235.**

**0773510757**

## வாசகர்களின் கவனத்திற்கு...!

# நான் உயிரோடுதான் இருக்கிறேன்—கனகா



புற்றுநோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்த பிரபல நடிகை கனகா கேரளாவில் ஆலப்புழாவிலுள்ள ஒரு மருத்துவமனையில் காலமானார் என்ற செய்தி நேற்றுமுன்தினம் இந்திய ஊடகங்களில் பரவியது.

எனினும் கனகா சாகவில்லை என்று நேற்றுக்காலை தெரியவந்தது. கனகாவே ஊடகவியலாளர்கள் முன் தோன்றி இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள வீட்டிலிருந்து கனகா ஊடகவியலாளர்களுக்கு பேட்டியளித்தார்.

நீங்க செத்துட்டதா செய்தி வந்துச்சே?

(சிறிது நேரம் விடாமல் சிரிக்கிறார்) நான் செத்துப் போனதா வந்த செய்தியை நானே பாத்தேன். அதைப் பாத்து சிரிச்சேன். உண்மைய சொல்லனும்னா மகிழ்ச்சியா இருந்துச்சு. ஏன்னா ரசிகர்கள் இன்னும் என்னை நினைவில் வச்சிருக்காங்களே அதனாலதான்.

இறந்து போனதா வந்த வதந்தி அதிர்ச்சியா இல்லையா?

ஒவ்வொரு மனுசனுக்கும் பிறப்பும் இறப்பும் சமம். அம்மா வயித்துல இருந்து பிறக்கிறோம். அப்புறம் இந்த மண்ணுக்குள்ள புதைகிறோம்.நெருப்பில் சிதைகிறோம். யாருக்கும் எந்த வியாதியும் வரலாம், போகலாம். இதில பயப்படுறதுக்கு என்ன இருக்கு?

திரும்பவும் சினிமாவில் நடிப்பீங்களா?

மறுபடியும் நடிக்கிறது பத்தி யோசிக்கல. காலம் நேரம் வந்தா பாக்கலாம். நல்ல வாய்ப்பு வந்தா நடிப்பேன்.

இறந்து விட்டதாக வந்த செய்தி உங்களை பாதிச்சிருக்கா?

இந்த வதந்திய பெரிசா எடுத்துக்கல. எனக்கு உலகம் பூரா ரசிகர்கள் இருக்காங்க. ஆனா எனக்கு நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை. சொந்தக்காரர்களும் இல்லை. அதனால இந்தப் புரளியை யார் கிளப்பியிருப்பாங்கன்னு எனக்கு கவலை இல்லை என்றார்.

(பெரும் பரபரப்பை ஏற்படுத்திய கனகாவின் மரணச் செய்தி குறித்து உதயசூரியனின் 24 ஆம் பக்கத்தில் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. இக்கட்டுரை குறித்து வாசகர்களிடம் உதயசூரியன் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது).


மத்திய மாகாண சபை தேர்தல் 2013



நுவரெலியா மாவட்டம்

கட்சி மாறாத... 26 வருட காலம் தொடர்ந்து நுவரெலியா மாநகர சபையில் ஐக்கிய தேசிய கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

நேருஜி JP MMC

அவர்களை

மத்திய மாகாண சபைக்கு அனுப்பி வைப்போம்!

